# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.



மில்க்வைற் நீலசோப், பார்சோப்

சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்






புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 புரட்டாதி திங்கள் 12-ம் நாள் (28—9—1966) புதன்கிழமை ஜ: ஆகிர் 12 | இதழ் 17


## அரசகரும

# மொழி இலாகா மூடப்படும்

## திறைசேரியில் தமிழுக்கு தனிப்பகுதி செயல்படும்

### தமிழரசுக் கோரிக்கை நிறைவேறுகிறது

அரசகரும மொழித் திணைக்களத்தை மூடிவிட, அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இத்திணைக்களம் மூடப்பட்ட பின்னர் அதன் அலுவல்கள் திறைசேரியிடம் ஒப்படைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

*அரச கருமமொழித் திணைக்களத்தின் ஒரு பிரிவான 'நூல் வெளியீட்டுப்பகுதி' அக்டோபர் முதலாந்திகதியிலிருந்து கல்வித் திணைக்களத்திற்குமாற்றப்பட்டுவிடும் என்று தெரிகிறது.*

இவ்விடயத்தில் கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கே. பி. இரத்தினம் எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும் கட்டம் வந்துவிட்டது. நூல் வெளியீட்டுப்பகுதியை அரசகருமமொழித் திணைக்களத்திலிருந்து அகற்றி, கல்வித்திணைக்களத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்று திரு. இரத்தினம் நீண்டகாலமாகக் கிளர்ச்சி செய்து வருகிறார். சில மாதங்களுக்கு முன்பு அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்திலும் அவர் இந்தக் கோரிக்கையை வற்புறுத்தியிருந்தார்.

நூல் வெளியீட்டுப்பகுதி அகற்றப்பட்டப் பின்னர், அரசகருமமொழித் திணைக்களத்தில் எஞ்சியிருப்பது அரசகரும மொழியை அமுல் நடத்தும் பகுதி மட்டுமே.

நிர்வாக அதிகாரிஒருவரின் தலைமையின் கீழ் இயங்குவதற்கு இந்த பகுதிமட்டும் போதாது என்று கூறப்படுகிறது. ஆகவே அத் திணைக்களத்தையே கலைத்து விட்டு, மொழி அமுல்பற்றிய அலுவல்களை திறைசேரியிடம் ஒப்படைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதென்று கூறப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழிலும் உண்டு

துறைமுக நாவாய் இயக்குனர் கழகச் செயலாளருக்கு துறைமுக ஆணையாளர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் திறைசேரி இலக்கம் 686ல் கூறப்பட்டிருப்பதன் பிரகாரம் திணைக்கள உட்துறைச் சுற்று நிருபங்களைத் தமிழில் அனுப்பவும், ஏனைய விடயங்களில் தமிழ் மொழி பெயர்ப்புகளைக் கொடுப்பதற்கும் ஒழுங்குகளை மேற்கொள்ளும் வண்ணம் தாம் துறைமுக ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் இப்பிரச்சினையயிட்டு நீண்ட நாட்க

(9-ம் பக்கம் பார்க்க)



அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவில் கலந்துக் கொள்வதற்காக இலங்கை வந்த திருச்சி அறிஞர் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை பலாலி விமான நிலையத்தில் தமிழரசு வாலிப முன்னணியினர் வரவேற்றனர். படத்தில் முத்தமிழ்க் காவலருடன் வி. கே. இராசசேகரன், வாலிப முன்னணிப் பிரமுகர்களான சின்னதுரை, சி. பாலசிங்கம், ச. கந்தசாமி ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## ஆங்கில கடிதங்களுக்கு தமிழில் பதில் கிடையாது

### கா. பொ. இ. விளக்கம்

அரசாங்க காரியாலயங்களுடன் ஆங்கில மூலம் தொடர்பு கொள்ளும் தமிழ் பேசும் மக்கள் அதற்கான பதிலை ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ எதிர்பார்க்க முடியாது. ஆங்கிலக் கடிதத்திற்கு ஆங்கில மொழி மூலமே பதில் கொடுக்க வேண்டு மென்பதற்கு இன்றுள்ள சட்ட விதிகளில் இடமில்லை என்று கிளிநொச்சித் தொகுதிப் பா. உறுப்பினர் திரு. கா பொ. இரத்தினம் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

*அரசாங்க இலாகாக்களுக்கு ஆங்கில மொழிமூலம் எழுதப்படும் கடிதங்களுக்கு சிங்களமொழியில் பதில்அனுப்பப்படுவது பற்றி நமது நிருபர் திரு. இரத்தினத்திடம் வினவிய பொழுது அவர் மேலும் கூறியதாவது:*

'தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழ் மொழி மூலம் தொடர்பு கொண்டால் மட்டுமே தமிழ்மொழி மூலம் பதிலையும் எதிர்பார்க்க முடியும். தமிழ் மொழிச்சட்டமும் இதற்குத்தான் இடமளித்துள்ளது. தமிழ் தவிர்ந்த வேறு மொழிகளில் தொடர்பு கொண்டால் சிங்களத்தில் பதில் அனுப்புவது எந்த வழியிலும் தவறாகமாட்டாது.

மேலும் இது பற்றி அவர் விரித்து கூறுகையில்; தமிழ் மொழி மூலம் ஒரு அரசாங்க திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான பதில் தமிழ் மொழி தவிர்ந்த வேறு மொழிகளில் அனுப்பப்பட்டிருந்தால் தான் அப்பிரச்சினையைப் பெரிது படுத்தி நடவடிக்கை எடுக்கத் தயாராகவும் இருப்பதாகத் தெரிவித்தார். ஆங்கிலத்தில் ஒருவருக்குப் பதில் எழுதும் வண்ணம் கேட்பது நீதியான செயல் அல்ல என்பதுடன் அதற்கு இன்றிருக்கும் சட்டங்களில் இடமில்லை என்று அவர் கூறினர்.

## 'எயர்சிலோ'னில் ஊழல்

### பிரயாணிகள் சங்கடம்

ஏயர் சிலோன் நிறுவனத்தில் பல ஊழல்கள் மலிர்ந்திருப்பதாக அறியப்படுகிறது. குறிப்பாக சென்னை, திருச்சி போன்ற இடங்களுக்கு விமான மூலம் செல்ல விரும்புபவர்கள் உரிய நேரத்தில் பிரயாணம் செய்ய வேண்டுமாயின் பிற்கதவு வழியாக ஏயர் சிலோன் ஊழியர்களுக்கு 'ஏதாவது' கொடுத்தே இடம் ஒதுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்களாம். இந்த 'ஏதாவது' பெறும் பழக்கம் இரண்டு ஆண்டுகளாக இருந்து வருவதாகவும், இப்பொழுது இத்தொகை அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. நேர்மையான முறையில் பிரயாணச் சீட்டைப் பெற்று ஒருவர் உரிய காலத்தில் இவ்விடங்களுக்கு செல்வதென்பது இன்று ஏயர் சிலோனைப் பொறுத்தவரையில் முடியாத காரியமாகி விட்டதாகப் பேசப்படுகிறது.

*1964ம் ஆண்டு டிசம்பரில் வீசிய சூறாவளியைத் தொடர்ந்து கடல்மார்க்க இந்தியப் பிரயாணம் சில மாதங்கள் தடைப்பட்டிருந்ததும், பின்னர் ஆரம்பிக்கப்பட்ட தலைமன்னார்—இராமேசுவரம் கப்பல் போக்குவரத்து வசதி குறைந்ததாக இருப்பதும் வாசகர்கள் அறிந்ததே. இப்பொழுது மீண்டும் தலைமன்னார்—இராமேசுவரம் கப்பல் போக்குவரத்து இரண்டு திங்கள் காலத்திற்கு நிறுத்தி வைக்கப்படவிருக்கிறது.*

*தலைமன்னார்—தனுஷ்கோடி கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டதும் பெரும்பாலானவர்கள் விமான*

(9-ம் பக்கம் பார்க்க)


இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



அடுத்த இதழ் வெளியூரில் 5-10-66 காலை தலை நகரில் 4-10-66 மாலை கிடைக்கும்

# ஓடிப்போனவன்

.... நவசோதி ....

## (9)
## பரீட்சை முடிவு

பத்துமணி அடித்தது.

ஆங்கிலவாத்தியார் ஆறும் வகுப்பில் பாடத்தை முடித்துக்கொள்ளவே, மாணவர்களின் கூச்சல் காதைப் பிளந்தது. 'டோய்...வழுக்கை வருகுது...' சண்முகத்தின் குரல் ஒரு மூலையிலிருந்து ஒலித்தது. வேலுப்பிள்ளை வாத்தியாருக்குத் தலையிலே வழுக்கை இருந்ததினல் அவரை 'வழுக்கை' என்னும் பட்டப் பெயரினல் தமக்குள் மாணவர்கள் குறிக்கொண்டனர்;

அந்தக் கல்லூரியின் ஏனைய ஆசிரியர்களுக்கும் அவர்களின் உருவத்தைப் பார்த்து முருங்கக்காய், யானை, போளே, கொளுக்கட்டை, தெட்டை, கட்டை என்றும் பழக்கவழக்கங்களைக்குறித்து சுருட்டு, வெத்திலைசப்பி என்றும் பலவிதமான பெயர்களைச் சூட்டியிருந்தனர்.

ஒரு சங்கீத ஆசிரியர் ஆங்கிலச் சொற்களை உச்சரிக்கும் முறையைக் கேட்டு அவருக்கு சிஞ்சு, டாஞ்சு, கொட்டல் என்று மூன்று பட்டப்பெயர்களையே சூட்டியிருந்தனர். இப்படியாக கசம், வியாதி, சொறிமாஸ்டர் என்று பட்டப்பெயர்களோ பலவிதம். தாய் தந்தையர்கள் தானே பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுவது? ஆசிரியர்களுக்குப் பட்டம் சூட்டும் மாணவர்களும் ஒருவழியில் தாய் தந்தையர்கள் தான். பட்டம் சூட்டும் பணியில் ஆறும் வகுப்பு மாணவர்களும் பின்னிற்கவில்லை.

வேலுப்பிள்ளைவாத்தியார் வகுப்பினுள் நுழையவே மீண்டும் அமைதிகுடிகொண்டது.

விட்டில் எழுதிக்கொண்டு வரும்படி சொன்ன கணக்குப் பாடத்தைச் செய்யாத மாணவர்களைக் கையை உயர்த்தும்படி கூறினர். கந்தசாமி சண்முகம், விமலநாதன் உட்பட ஐவர்உயர்த்தினர். பெஞ்சின்மேல் ஏறி நிற்கும்படி அடுத்த கட்டளை தொடர்ந்தது. ஐவரும் எழுந்து நின்றனர்.

கந்தசாமியின் கால்கள் நடுங்க ஆரம்பிக்கவே 'கலீர்' என்னும் ஒருமித்த சிரிப்பொலியை மாணவர்கள் எழுப்பினர்.

மேசையிலேஆசிரியர்பிரம்பினல் தட்டியதும் அமைதி நிலவியது. ஐவருக்கும் வசைமொழி பாடினர் ஆசிரியர். வசந்தனின்முன்மாதிரியைப் பின்பற்றமுடியாதா என்று அவர்களிடம் கேட்டார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

'பஞ்சபாண்டவர்களே பூமியில் இறங்கி உங்கள் அரியாசனங்களில் அமருங்கள்' என்று கூறி அவர்களை எச்சரித்தபோது மாணவர்கள் சிரிக்காமலா இருப்பார்கள்.

வகுப்பேற்றப் பரீட்சைக்கு இன்னும் நான்கு கிழமைகளே இருக்கின்றதென்று அவர் தெரிவித்தபோது வகுப்பில் நிசப்தம்நிலவியது. சில நாட்கள் ஓடி மறைந்தன.

விமலநாதனின் படிப்பைப் பற்றி முறையிடுவதற்காக வீட்டிற்கு வந்திருந்தார் வகுப்பாசிரியர்.

அவர் வருவதைக்கண்ட விமலநாதன் வீட்டிலே இருக்காது ஓடி மறைந்தான்.

படிப்பிலே அவன் கவனம் செலுத்தாததைப் பற்றிக் குறைகூறிய ஆசிரியர் சில நாட்களில் வேறு மாணவர்களுடன் சேர்ந்துபடம்பார்க்கப் போவதையும் குறிப்பிட்டார். அப்பொழுது விமலநாதனின் அப்பா வீட்டில் இல்லை;

ஆசிரியரின் முறையீட்டை எண்ணி மனம் வருந்தினள். விமலநாதன் வீடு திரும்பிய போது ஆசிரியரின் முறையீட்டைக்கூறி அவனுக்குப் புத்தி கூறினன். ஆனல் அவை வரும் அவனுக்குக் கூறிய புத்திமதிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்று. வகுப்பேற்றப் பரீட்சையும் அண்மித்தது.

மாலதியும் வசந்தனும் சிரத்தையோடு படித்தார்கள். பரீட்சையைப் பற்றி கவலை கொள்ளாது விளையாடித் திரிந்தான் விமலநாதன். சிலநேரங்களில்படிப்பதாகப் பாசாங்கு செய்தான்.

ஒருமுறை அவனுக்கு வசந்தன் புத்தி கூறியபோது 'நீ யார் அதைக் கேட்க' என்று கிடைத்த பதில்அவனை ஈட்டியால் குத்தியதைப் போன்றிருந்தது. தன்னுடன் கற்கும் தம்பி பாஸ் பண்ணுவிடில் அவனைவிட எப்படி ஒரு வகுப்பு மேலே படிப்பது என்று நினைந்து இரக்கப்பட்டான் வசந்தன்.

பரீட்சை நாளும் வந்தது. மூவரும் பரீட்சை எழுதினர்கள். ஒரு வாரத்திற்குள் பரீட்சை முடிவும்வெளியாகியது.

வசந்தனும் மாலதியும் சித்தியடைந்திருந்தனர். விமலநாதன் சித்தியடையாததைக்கண்டு வீட்டில் அனைவருமே துக்கப்பட்டனர். இக்கட்டான நிலையிலே விமலநாதனை எண்ணி வருந்தினன் வசந்தன்.

தன் மகன் சித்தியடையவில்லையே என்னும் வேதனையில் 'வசந்தனையாவது கேட்டுப் படித்திருக்கக் கூடாதா...' என்றஆத்திரத்தையும் அவள் உமிழ்ந்தாள்.

அதற்குவிமலநாதன் கூறிய பதில் அவனுக்கு வசந்தன் மீது ஆத்திரத்தைக் கிளப்பியது.

'நான் கேட்டேனம்மா... ...ஆனல் அவன் தான் சொல்லித் தரல்லே' என்று ஒரு பொய்யை அண்ணனென்ற மதிப்பில்லாது வாய்கூசாது கூறினன்.

தம்பிக்கு எதிராக எதுவுமேகூருது மௌனம்சாதித்தான் வசந்தன்.


'இல்லையம்மா, அண்ணன் பொய் சொல்ருர். வசந்த அண்ணனை ஒருநாளும் இவர் கேட்கவில்லை' அசாத்தியத் துணிவில் உண்மையைக் கக்கினள் மாலதி.

'ஏன்டி! நீ ஏன் பொய் சொல்லுருய். நான் கேட்டதை நீ கண்ணுட்டா...இல்லை எண்டு பொய்யா சொல்லனும்' என்று ஆத்திரத்துடன் மாலதியின் கன்னத்தில் பளீர் என்று அறைந்தான் விமலநாதன்.

ஒருசமயம் ஒன்றுமே தெரியாத இருண்ட நிலையில் தடுமாறினள் மாலதி.

வசந்தனின் நெஞ்சு விம்மி வெடித்தது. உண்மையைக் கூறமுனைந்த தங்கைக்குத் தானு கிடைத்த பரிசு என்று ஏங்கி பிரமித்து நின்ருன் அவன். அமைதியாகக் குமுறிக்கொண்டிருந்த எரிமலையின் பக்கம் போனன் மாலதியின் அன்னை. அறைக்குள் ஓடிச்சென்ற மாலதி 'விக்கி விக்கி' அழுதாள்.

தனக்காகக் கன்னத்தில் அடிவாங்கிய மாலதியைத் தேற்றவும் முடியாது தவித்தான் வசந்தன். அவனின் எண்ணங்கள் சுழன்றன.







# கொரியாவில் ஒரு 'ஞானசம்பந்தர்'

சைவ சமயக் குரவர்களிலே ஒருவரான திருஞானசம்பந்தர் தனது 3வது வயதிலே தேவாரம் பாடினர் என்பதை நம்பமறுக்கும் பகுத்தறிவாளர்களுக்கு இதோ ஒரு சவாலாககொரியா நாட்டில் தோன்றியிருக்கின்ருன் 'கிம் உங்யாங்' என்ற மூன்று வயது சிறுவன்.

1963ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் திகதி இச்சிறுவன் பிறந்தான். இச் சிறுவனின் தந்தை 'கும் குசன்' ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர். தாயின்பெயர் 'யோ'. இவரும் ஒரு ஆசிரியையாக கடமையாற்றுகிறார்.

இச்சிறுவன் இப்போது 39 இருத்தல் எடையும், 34 அங்குல உயரமும் உள்ளவனுக இருக்கிருன். பிறந்த 13ம் மாதத்தில் ஆங்கில மொழியில் மிகவும சரளமாகப் பேசிய இவன், 14 ம் மாதத்தில் ஜெர்மன் மொழியை எழுதப் பழகி விட்டான். ஒன்றரை வயதில் ஓவியங்கள் வரைய ஆரம்பித்து ஓவியர் ஆகி விட்டான். இரண்டரை வயதில் நாட் குறிப்பு எழுத ஆரம்பித்த இப்பையன், இப்பொழுது பல காவியங்களையும் ஓவியங்களையும் எழுதிக் குவித்து விட்டான்: ஆங்கிலம், ஜெர்மன் மொழி, கொரிய மொழி ஆகிய மூன்றிலும் பாடல்கள் எழுதுவதிலும் நிபுணனுக விளங்குகிருன்.

இம்மாதம் தொடக்கம், அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் படிக்கத் தொடங்கியிருக்கும் இவனைப்பார்க்க பல நூற்றுக்கணக்கான பேர்கள் தினமும் வந்து குவிந்தபடி இருக்கிருர்கள்.

இந்த அதிசயச் சிறுவன் தனைப் பேட்டி காணவந்த பத்திரிகை நிருபர்களிடம் பிரமிக்கத்தக்க பதில்களை அளிக்கின்ருன். 'வானில் மிதக்கும் வெள்ளை மேகம் பஞ்சு போற் தோற்றுவதால் ஏன் அதைக்கொண்டு உடை நெய்யக் கூடாது' என்பது இவன் தனது நாட்குறிப்பில் எழுதி வைத்திருக்கும் குறிப்புகளில் ஒன்று.

மூன்றரை வயதுள்ள இச் சிறுவனுக்கு முடி வெட்டிக் கொள்வதும் குளிப்பதும் என்றால் எட்டிக்காய்தான்.

## இவர்கள் கணக்குப் புலிகள் தான்!

6-9-66ந் திகதி வளர்மதியில் வெளியான கணக்குப் போட்டிக்கு விடை:-

இராமனிடம் இருந்த பணம் 14 ரூபா

கோபுவிடம் இருந்தது 10 ரூபா.

சரியான விடை அனுப்பிய கணக்குப் புலிகளின் பெயர்கள் வருமாறு:-

த. அருமைநாயகம்—மீசாலை. செல்வி. இந்திராணி அம்பலவாணர்—பதுளை, அ. கருணுகரன்—அராலி தெற்கு, க. இரவீந்திரன்— கொழும்பு. 13, கதிர். செல்வநாயகம்—மாதகல் மேற்கு, பொ. குகதாஸ் — மட்டுவில் தெற்கு, செல்வி. சரோஜினி அம்பலவாணர்—பதுளை, ம. செல்வராசா, —கொல்லங்குளம், ச. பபிதில்லைநடராசா — தெகிவளை, பி. தயானந்தன்—கந்தர்மடம் ஜெ. ஜெயக்குமார் — பருத்தித்துறை, செல்வி. அ. கலாசோதி—வட்டுக்கோட்டை, ஆ. ப. சந்திரநாதன் — மீசாலை, அ. ஜவகர்ஷா—அனுராதபுரம், பி. சி. பி. ஞானதுரை உடுவில், மு. செபஸ்தியாம்பிள்ளை— யாழ்நகர் க. மலர்ராஜன்— திருகோணமலை, கமலாதேவி—வளலாய்,

அடுத்த வாரம் புதிய போட்டியை எதிர்பாருங்கள்!

## கங்காரு

உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு விதமான விசித்திர பிராணிகள் உண்டு. ஆனல், அவுஸ்திரேலியாவிலும், அதன் அண்மையிலிருக்கும் தீவுகளில் மட்டுமே 'கங்காரு' என்னும் பிராணி வாழ்கிறது. இவற்றிலும் காட்டுக் கங்காரு, மலைக்கங்காரு, எலிக்கங்காரு என பல வகைக் கங்காருகள் உண்டு.

புல்வெளிகளில் வாழும் கங்காரு உருவில் சற்று பெரியதாகவே இருக்கும். எலிக்கங்காரு மிகச் சிறியதாகவே இருக்கும். இதன் முகமும் முன்னங் கால்களும், வாலும் மிகவும் பருத்தும், நீண்டும் காணப்படும். இது நடப்பது குறைவு. எங்குச் செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் பின்னங்கால்களினலேயே தாவித் தாவி ஓடும். இதற்கு மிகவும் கூர்மையான பார்வையும் நாய்களைப்போல் மோப்பம் பிடிக்கும் சக்தியும், நிலத்திலேற்படும் அதிர்ச்சிகளையும் அறியும் தன்மையும் உண்டு.

கங்காரு தன் மனைவி மக்கள்எல்லோரோடும்வாழ்ந்து வரும் ஒரு பிராணி. பெண் கங்காரு ஒரு முறைக்கு ஒரு குட்டி மாத்திரமே போடும். குரங்கு எப்படித் தன் குட்டியை வயிற்றுப் பக்கமாக வைத்து வளர்க்கிறதோ அதே போல் கங்காரும் தன் பிள்ளையைவயிற்றின் வெளிப்புறத்திலுள்ள பைக்குள் வைத்தே வளர்க்கிறது. குட்டியும் பைக்குள்ளிருந்தே பால் குடித்து வளரும்.

பசறை குறூப்

எஸ். தோமஸ்.



ஒரு சில மாதங்களுக்கு முன்பு பாடசாலைச் சிறுமியாக இருந்த ஆன் மரியா இப்பொழுது பிரபல டெலிவிஷன் நடிகையாக மாறி விட்டார். இவருக்கு வயது 13. பி. பி. ஸி தயாரித்துள்ள 'அலிஸ் இன் வொண்டர்லண்ட்' என்ற டெலிவிஷன் படத்தில் பிரபல ஹாலிவூட் நடிகர் பீட்டர் ஸெலர்ஸுடன் இவர் காணப்படுகிருர்.




தா. சிவசுப்பிரமணியம்,
விந்துலே.

கே: நீங்கள் வாராவாரம் சிறந்த கேள்விக்குப் பரிசாக மூன்று ரூபாய் கொடுத்திருக்கிறீர்களே. அதிர்ஷ்ட வசமாக அப்பரிசு எனக்குக் கிடைத்து, நான் அதை அனுப்பவேண்டாமென்று உங்களைக் கேட்டு, அதற்காக மூன்று மாதங்களுக்கு வாராவாரம் சுதந்திரனை அனுப்பிவைக்குமாறு கேட்டால் என்ன செய்வீர்கள்?

ப: பணத்தை சுதந்திரன் அலுவலகத்தில் செலுத்தி உங்களை மூன்றுமாதச் சந்தாதாரராக்கிவிடுவோம்.

ஃ

"குமாரச்செல்வன்",
ஏழாலை-மேற்கு.

கே: காகிதத் திட்டங்களைத் தயாரிப்பதில் தேசிய அரசாங்கமும் குறைந்ததல்லவே!

ப: குறைந்ததல்ல-ஏனெனில் திட்டங்களைக் காகிதத்திலன்றி வேறுஎதிலும் எழுத தேசிய அரசாங்கத்துக்கும் தெரியாது.

கே: போட்டி போட்டுக் குட்டி போடும் தமிழ்ச் செய்தி ஏடுகள் எதுவுமே தமிழ்பேசும்மக்களின் நலனைப்பற்றி சிந்தித்துப் பார்ப்பதும் இல்லையே!

ப: அவர்களின் நலனைப் பற்றி சிந்தித்தால்பத்திரிகை முதலாளிகளின் நலன் என்னாவது! பத்திரிகைத் தொழிலில் ஏகபோகம் வளர்ந்துவிட்டால் மக்களின் நலனைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாமல் போய்விடும்.

ஃ

க. மு. தாசன்,
கொச்சிக்கடை.

கே: இன்றைய தினசரிப் பத்திரிகைகளில் நிறைய இருப்பது என்ன?

ப: அழகிகளின் அரை நிர்வாணப் படங்களும், அவர்களைப்பற்றிய செய்திகளும்.

கே: ஈழத்து எழுத்தாளரை ஊக்குவிக்க பத்திரிகைகள் என்ன செய்யவேண்டும்?

ப: அவர்களின் படைப்புகளைப் பிரசுரிக்கவேண்டும் வாசகர்களைப்பற்றி கவலைப் படாமல்.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

● கே: தேசிய அரசாங்கம் அமைக்க தமிழரசுக்கட்சி உதவியதனுல் தலைதப்பிய பத்திரிகை தாபனங்களில் சில, பழைய பல்லவியாம் வகுப்புவாதத்தை மீண்டும் கக்குகின்றன. இவைகளுக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க முடியாதா?

ப: முடியும். ஆனுல் பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைக்க ஜனநாயகத்தில் இடமில்லையே.

ஃ

க. குமாரசிங்கம்,
மீசாலை வடக்கு.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். இதேபெண்ணை என் நண்பரும் காதலிக்கிருர். நான் என்ன செய்வது?

ப: முதலில் இருவரும் மனம்விட்டுப் பேசுங்கள்! பின்னர் பெண்ணைக் கேளுங்கள். அவள் யாரைக்காதலிக்கிருளோ, அவருக்கு விட்டுக் கொடுத்துவிட்டு, மற்றவர் வேறு வழியைப் பாருங்கள்!

ஃ

க. நாகராசா,
கொழும்பு-12.

கே: சிங்கள ஆசிரியர்களைத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பும் கல்வி மந்திரியின் யோசனையைப் பெ. கட்சி எதிர்க்காதது ஏன்?

ப: தமிழர்கள் தற்போதையநிலையில் சிங்களம்படிப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை அவர்களால் உணர முடியாததுதான் காரணம்.

ஃ

எம். ஐ. நாதன்,
முள்ளியவளை.

கே: தமிழ்க் காங்கிரஸ் எம். பி.க்கள் ஏன் உலக வலத்தை விரும்புகிருர்கள். திருச்செல்வம் ஏன்முற்ருக மறுக்கின்ருர்?

ப: உள்ளூரில் வேலையில்லாவிட்டால் வெளியூரைச் சுற்றிவருவதிற் தவறென்ன? திரு. திருச்செல்வத்துக்கு உள்ளூரில் மூச்சுவிட முடியாத அளவுக்கு ஏகப்பட்ட வேலை. அவர் கடமையில்கண்ணுக இருப்பவர். வெளிநாடு செல்வதைப்பற்றி சிந்திப்பதற்கே இப்பொழுது அவருக்கு அவகாசமில்லை.

ஃ

'செந்தூரன்',
கொச்சிக்கடை.

கே: சிங்கள மக்களில் ஒரு சாரார் தமிழ்மக்களைபற்றி தவருன அபிப்பிராயங் கொண்டுள்ளனர். இவர்களுக்கு தமிழர்களுடைய நிலையை உணர்த்த நீங்கள் ஒரு சிங்களப் பத்திரிகை நடத்திஞல் என்ன?

ப: அதற்கான சூழ்நிலை சிங்களமக்களிடமே உருவாக வேண்டும். தேசிய ஐக்கியம் அந்த நிலையைதான் உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

> **திருவாளர்**
> **குயுக்தியார்**
> **மே/பா சுதந்திரன்**
> **த. பெ. இல. 1188**
> **கொழும்பு-12.**
>
> ● இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிருர்.

கே: இந்துப் பல்கலைக்கழக விவகாரம் மதத்தால் வேறுபட்ட தமிழ்மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தப் போகிறதே! இதற்கு அரசாங்கம் என்னசெய்யப்போகிறது?

ப: இந்துப் பல்கலைக் கழகத்தை நிறுவாமலிருக்கப் போகிறது.

ஃ

வி மரியநாயகம்,
கொழும்பு-10

கே: ஐயா குயுக்தியாரே, 24-7-66 ல் வெளியான சுதந்திரன் இதழின் முதலாவது பக்கத்தில் புதிய திறைசேரிச்சுற்றுநிருபம் ஒன்று கூடிய விரைவில் வெளியாகும் என்றும், அச்சுற்றுநிருபத்திலே வெளியாகவிருக்கும் விசேட அம்சங்களை இரத்தினச் சுருக்கமாகவும் வெளியிட்டிருந்தார்கள் சுதந்திரன் அலுவலகத்தார் (1) அவர்கள் இந்த விடயங்களை எப்படி அறிந்தார்கள்? (2) அவர்கள் இவ்வளவு சிக்கிரத்தில் அறிந்த விடயம் ஏன் இது நாள் வரை திறைசேரிச்சுற்று நிருபமாக வெளிவரவில்லை?

ப: சுதந்திரன் நிருபர்கள் வேட்டையாடிய செய்தி அது. சுற்று நிருபம் தான் ஏற்கனவே வெளி வந்துவிட்டதே!

ஃ

ஈழத்துமணி
யாழ்ப்பாணம்

கே: கிழக்குமாகாண முஸ்லிம் பா. உறுப்பினர்களிற் சிலர் வழியைத் தவறவிட்டு நடக்கப்பார்க்கிருர்களே! அவர்களைப்பற்றி குயுக்தியாரின் கருத்தென்ன?

ப: அவர்கள் உண்மை நிலையை உணரும்நாள் வெகுதூரத்திலில்லை.

கே: திரு. பொன்னம்பலம் அவர்கள் ஐ. நா சபை சென்று திரும்பியதும் யாழ்ப்பாண மக்களிடம் என்ன சொல்லுவார்?

ப: ஐ. நா. வில் தமிழ் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களை தான் எடுத்துக் காட்டியதும் உலகப் பிரதிநிதிகள் அதிர்ச்சியடைந்து இப்பொழுது அவர்கள் எல்லோரும் தமிழ் இலக்கியங்களைப் படிப்பதற்கு (தமிழைப் படிக்காமலே) ஆரம்பித்துவிட்டார்களென்றும் அடித்துக் கூறலாம்.

ஃ

ஆர். கே. திருகோணசுந்தரம்,
புதுவட்டகொடை.

கே: மலையகத்திலுள்ள ஒரு பிரதிநிதியிடம் மலையகத்தில் நடந்துவரும் தமிழ்கொலைகளைப் பற்றிபுகார்செய்தபோது, தமிழா சோறுபோடுகிறது என்ருராம். இவரைப்பற்றித் தாங்கள்என்ன நினைக்கிறீர்கள்?

ப: தோட்டத் தொழிலாளி தனது உழைப்புச்சக்தியை விற்று உயிர் வாழ்பவன் என்ற காரணத்தால் அவர் மொழியை அலட்சியம் செய்கிருர். ஆனுல் இந்த அலட்சியம் தோட்டமக்களைப் படிப்படியாக இனமாற்றம் செய்துவிடும் அபாயத்தை அவர் உணரவில்லை. அவருக்கு அரசியல் ஞானம் பூஜ்யம் என்பதையே அவரது பதில் எடுத்துக்காட்டுகிறது.

கே: சீனு ஐ. நாவில் அங்கம் வகிக்க நேரிட்டால் அனேக நாடுகள் ஐ. நாவில் இருந்து வெளியேறும் என்பது உண்மையா?

ப: சீனுவை ஐ நா. வில் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவருவதும் பின்னர் அதனைத்தோற்கடிப்பதும் ஐ. நா. வில் நடைபெறும் ஒரு வருடாந்த வாணவேடிக்கை. சீனு தனக்கு ஐ. நா. வில் இடம் கொடுக்கும்படி இதுவரை கேட்கவில்லை, மற்றவர்களுக்குத்தான் இதில் அக்கறை சீனுவிற்கு ஐ. நா. வில் என்றுமே இடம் கிடைக்காது. எனவே எந்த நாடும் வெளியேறும் பிரச்சினையும் எழவில்லை.



'எருமை' விஷயம்!

பால் உற்பத்தியைப் பெருக்க இந்தியாவிலிருந்து ஆயிரம் எருமை மாடுகள் இறக்குமதி செய்யப்படும்.

— செய்தி

— ஏன்? இங்கேயுள்ள 'எருமைகள்' போதவில்லையா?

அருண்டவன் கண்ணுக்கு......

இந்திஎதிர்ப்புப்போராட்டத்தை மீண்டும் துவக்க தி. மு. க தயாராகி வருகிறது.

— பக்தவச்சலம்

—அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பிசாசு என்றபழமொழியை நினைவூட்டுகிறுர் ஒரு தி.மு.க. தோழர்.

வாளெடுத்தவன்...

வீட்டில் தயாரித்த எறி குண்டு வெடித்து தயாரித்தவரே மரணமானுர்.

— செய்தி

— வாளெடுத்தவன் வாளால் மடிவான் என்பது தமிழ்ப்பழமொழி.

தேசிய பானம்

கள்ளு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

— செய்தி

— 'குடி' தழைக் கோலோச்சும் அரசு இலங்கையின் தேசியபானமான கள்ளை உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கத் தானே வேண்டும் என்கிருர் ஒரு 'குடி' மகன்.

அரசியல் விலாங்குகள்

இலங்கையில் அதிகமான பேர் மீன் உண்ணுகிருர்கள்.

— செய்தி


— அதனுல் தான் அரசியல்வாதிகளானசில 'விலாங்கு மீன்களை இன்னும் விட்டு வைத்திருக்கிருர்களோ?




பிளக்கும் தலைவலி, பல்வலி, தடிமல், காய்ச்சல், உடல்வலி, மாதவிடாய் முதலியவற்றுல் அவஸ்தைப்படும்போது டிஸ்பிரினை பாவியுங்கள். டிஸ்பிரின் வேதனையைத் தணித்து உடன் நிவாரணமளிக்கும்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபார்சு செய்கிருர்கள்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். வில்லையை விழுங்கி விடலாம் அல்லது தண்ணீரில் கரைத்துக் குடிக்கலாம்.



றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

JWTRC100

# தோட்டப் பாடசாலைகளை

# அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்

## கல்விப் பிரச்சினையில் கவனம் செலுத்துக

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று, அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று தமிழரசுத் தந்தை அவர்கள் மீண்டும் குரலெழுப்பியுள்ளார். சென்ற வாரம் நடைபெற்ற மலைநாட்டுத் தமிழாசிரியர்கள் சங்கத்தின் ஆண்டுவிழாவில் பேசுகையில் இது மலை நாட்டுத் தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும். இக்கோரிக்கை பற்றி விரைவில் அரசாங்கப் பாராளுமன்றக் குழு விவாதிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இக்கோரிக்கையைத் தேசிய அரசாங்கம் நிறைவேற்றி வைத்தல் வேண்டும். இன்றேல் மலையக மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு பங்கமேற்படலாம்.

மலையகத் தமிழ் மக்களின் கல்விப் பிரச்சினை இன்று ஈழத்துத் தமிழ்ப் பேசும் இனத்தின் முக்கிய பிரச்சினைகளிலொன்றாகும்.

தேசிய அரசாங்கமொன்று ஆட்சி பீடமேறியும் கூட இதுவரை மலை நாட்டுப் பிள்ளைகளின் கல்விப் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

தோட்டப் பாடசாலைகளின் நிலைமையையும், கல்வித்தரத்தையும் பற்றி பன்முறை கூறியாயிற்று. பாடசாலைக் கட்டிடங்கள் படுமோசம். பாடசாலைக்கு அத்தியாவசியமான வாங்குகள், மேசைகள், கரும் பலகைகள் போன்ற தளபாடச்சாமான்களோ கல்வி போதனைக்குத் தேவைப்படும் உபகரணங்களோ அங்கு போதுமான அளவு கிடையா.

சிறுர்களுக்கு ஆரம்பவகுப்புகளில் கல்வி போதனைகளுக்குச் சில உபகரணங்கள் மிக மிக அவசியமாகும். ஆரம்ப வகுப்புகளுக்குத் தனிப் போதனு முறைகளுமுண்டு. அவசியமான உபகரணங்களின்றேல் அப்போதனு முறைகளை ஆசிரியர்கள் கையாளுவது கடினமாகும். இதற்கான வசதிகள் தோட்டப்பாடசாலைகளிற் கிடையா.

இதனுல் கல்வி போதனை திறமையாகவும், பயனுள்ள முறையிலும் செய்ய முடியாமலிருக்கிறது. ஐந்தாம் வகுப்பு வரை தோட்டப் பாடசாலைகளில் கல்வி போதிக்கப்படுகிறதென்பது வெறும் பெயரளவிற்தான்.

### ஆசிரியர் பலிக்கிடா

தோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் கல்வி அறிவு நகரப் பாடசாலையொன்றில் ஐந்தாம்வகுப்பு மாணவர்களின் கல்வி அறிவிலும் குறைவானதாகும். இந்தக் குறைவுக்கு ஆசிரியர்கள் தான் பொறுப்பு என்று சிலர் கூறுகின்றனர்.

இது தோட்ட நிர்வாகத்தின் தந்திரம். தோட்டப் பிள்ளைகளுக்கு கல்வி அறிவூட்டவேண்டிய தங்களின் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்காகத் தோட்ட நிர்வாகம் ஆசிரியர்களைப் பலிக்கடாவாக்குகிறது.

தோட்டப் பாடசாலைகளை முழுமையாக எடுத்துப் பார்த்தால் அது ஒரு மிகப் பெரிய கண் துடைப்பு, ஆனால் மிகத் திறமையான கண்துடைப்பு. தோட்டத்துக்கு வெளியே வசிக்கும் மக்களின் கண்ணில் மண்ணைத் தூவும் ஒரு கீழ்த்தரமான கண்துடைப்பு.

தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் நிலைமையும் பரிதாபமாகவே இருக்கிறது. அவர்களுக்குப் போதிய ஊதியமும், இதர வசதிகளும், சலுகைகளும் கொடுக்கப்படவில்லை.

போதனு கலாசாலைகளில் சேர்ந்து பயிற்சி பெறும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிடையாது. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தோட்டப்பாடசாலைகளில் போதித்தால் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி அறிவு கூடிவிடும் என்று பயப்படுகிறார்கள் போலும்!

தோட்டப் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் பிள்ளைகள் தங்களின் படிப்பைத் தொடர்ந்து நடத்த முடியாமலிருக்கிறது. நகரப்பாடசாலைகளில் அவர்களுக்கு இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. இதில் பல இடர்ப்பாடுகள் அவர்களை எதிர்நோக்கி இருக்கின்றன.

### பிரசாஉரிமைப் பிரச்சினை

பாடசாலையில் இடம் வேண்டுமா, பிரசாவுரிமையை நிருபியுங்கள் என்று கேட்கும் பாடசாலை அதிபர்கள் இன்னும் இருக்கின்றனர். இத்தகைய இடுக்கண்களிடையே தோட்டப் பிள்ளைகள் எப்படிக் கல்வி பயிலமுடியும்? இந்த முட்டுக்கட்டைகளின் விளைவு இச் சிறுர்களின் எதிர்காலம் இருளடைந்து விடுவதுதான்.

தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொள்ளாவிட்டாலும் அத்தப்பாடசாலைகளின் தரத்தையாவது உயர்த்துங்கள். 8ம் வகுப்பு வரை படிக்கக்கூடியதாக பாடசாலைகளை அபிவிருத்தி செய்யுங்கள் என்று தேசிய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தோட்டப் பாடசாலைகளின் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவுமில்லை. அவற்றை அபிவிருத்தி செய்யவுமில்லை. அவற்றின் தரத்தை உயர்தவுமில்லை. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒன்றரை ஆண்டுகளுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# மலைநாட்டுத் தொழிலாளரின் சம்பள உயர்வுப் பிரச்சினை

# கோரிக்கையின் வெற்றி அரசாங்கத்தின் தலையீட்டைப் பொறுத்தது

### இ. தொ. கழக மாநாட்டில் செயலாளர் அறிக்கை

மலை நாடு

"தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வுக்கோரிக்கை வெற்றி பெறுவது அரசாங்கத்தின் தலையீட்டில் பெருமளவு தங்கியிருக்கிறது. பஞ்சப்படி கோரிக்கை இப்பொழுது சம்பள நிர்ணய சபை முன் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் திடமான கொள்கையும் கூட. ஆனல் இக்கோரிக்கையின் வெற்றி-தோல்வியை அரசாங்கத்தின் தலையீட்டினைப் பொறுத்தே நிர்ணயிக்க முடியும்" என்று இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் திரு. செ. கலியப் பெருமாள் தனது ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அட்டன் சென். ஜோன் பொஸ்கோ கல்லூரியில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழக மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையில் திரு. கலியப்பெருமாள் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது!

அண்மையில் நடைபெற்ற சம்பவங்களில் 17/50 பஞ்சப்படி கோரி தோட்டத்தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்த போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும். தொழிலாளர் தொடர்ந்து ஒரு பொருளாதாரக் கோரிக்கைக்காக நடாத்திய முதல் போராட்டம் என்பதாலும் முரணுன இலட்சியங்களைக் கொண்ட பல்வேறு தொழிற் சங்கங்கள் போராட்டத்தில் கலந்து கொண்டமையாலும், இப்போராட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

தொழிலாளருக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டுமென்ற எமதுகோரிக்கைக்கு இணங்கவும் போராடும் தொழிலாளியின் சக்தி பலவீனப்படுத்தப்படக் கூடாது என்பதற்காகவுமே கழகம் இப்போராட்டத்தில் குதித்தது.



செ. கலியப்பெருமாள்.

இப்பிரச்சினை சம்பள நிர்ணய சபைக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும் என்ற திடமான கொள்கையை அரசாங்கம் கொண்டிருந்தது என்பதை நாம்ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் இத்தகைய போராட்டங்களின் வெற்றி அரசாங்கத் தலையீட்டில் பெருமளவு தங்கி இருக்கின்றது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

கூட்டு நடவடிக்கை என்ற அத்திவாரத்தின் கீழ் இவ் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படாததினுலும் தீர்க்க தரிசன நோக்குடன் எதார்த்தமான எடுகோள்களின் அடிப்படையில் போராட்ட மார்க்கம் அமைக்கப்படாததின் விளைவாகவும் ஈற்றில் போராட்டம் தளர்ச்சியடைய நேரிட்டது.

தொழிலாள வர்க்கம் தனது உரிமைகளை வென்றெடுக்க போராட்ட அஸ்திரத்தை பிரயோகித்தே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் உள்ள தற்காலத்திலும் கூட தனது சக்தியை வீணில் விரயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற உண்மையை உணர வேண்டியது அவசியம்.

இக்கோரிக்கை தற்சமயம் சம்பள நிர்ணய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சம்பள நிர்ணய சபைமூலம் சம்பள உயர்வுபற்றி நியாயமான முடிவு ஏற்படாத பட்சத்தில் இக் கோரிக்கையை வென்றெடுப்பதில் தொழிலாளருக்கு பூரண வழிகாட்டியாக இலங்கைத் தொழிலாளர் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)


இ. போ. ச.

இலங்கை ஜெர்மன் பயிற்சி பாடசாலை பிரவேச பரீட்சைக்கான 5 பாடங்களது கடந்தகால வினு விடைகளும் எதிர்பார்க்கக் கூடிய வினு விடைகளும் அடங்கிய

ஓரே பயிற்சிக் கோவை

விலை ரூ 5/-

தபால் செலவு - 50 சதம்

சர்வகலாசாலை போதனு கழகம்

540, மருதானை வீதி, த. பெ. இல 1079

கொழும்பு 10

தொலை பேசி: 91699




ரிஷி நேத்திர சஞ்சீவியின் புதிய விலை:

6 அவுன்ஸ் பாட்டல் 3-50

12 ,, ,, 6-50

## மாவட்டசபை மசோதாவில்

# திருத்தங்கள் வேண்டாம்

# தமிழரசுவற்புறுத்து 'ஜனதின' கூற்று

"மாவட்டசபை மசோதாவைப் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கமுன்பு அதில் சில திருத்தங்களைச் செய்வதற்குப் பிரதமர் டட்லி சேனநாயக்கா கருதினரெனினும், தமிழரசுக் கட்சியின் கடுமையான ஆட்சேபத்தின் காரணமாக அவர் அந்த முயற்சியைக் கைவிடவேண்டியதாயிற்று" என்று 'ஜனதின' (23-9-66) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச் செய்தி மேலும் கூறுவதாவது!-

'தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகமும் அமைச்சர் திருச்செல்வமும் கூடிப்பேசி, இரகசியமாகத் தயார் செய்யப்பட்ட இந்த மாவட்ட சபை மசோதாவை உள்ளூராட்சி உதவி அமைச்சர்உட்பட அரசாங்கக் கட்சியிற் செல்வாக்குள்ள ஒருகோஷ்டி எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது.

உள்ளூராட்சி அமைச்சரைத் தவிர வேறு யாரையும் இந்த மசோதாவில் கைவைப்பதற்குத் தமிழரசுக்கட்சி இடமளிக்கவில்லை.

மசோதா பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டபின்பு அதனை ஆராய்வதற்காகஏழு கட்சிக் கூட்டில் செல்வாக்குள்ள ஒரு கோஷ்டி அனுமதி கேட்டதெனினும், தமிழரசுக்கட்சியின்நிர்ப்பந்தத்தின் காரணமாக பிரதமருக்கு அவ்வாறு செய்ய முடியாது போயிற்று.

வட, கிழக்கு மாகாணங்களில் கல்வி, காணி, சமூகசேவை உள்ளூராட்சி முதலிய விவகாரங்களைமாவட்டசபைகளின் பொறுப்பில் விடக்கூடியதாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மசோதாவைக் கண்டு பீதியடைந்துள்ள பிரதமர் தமிழரசுத் தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தி மசோதாவில் சில திருத்தங்களைச் செய்ய அனுமதி கேட்டாரெனினும், அதற்கு இதுவரை இடம் கிடைக்கவில்லை.'

## அரசாங்கம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலாகியும் தோட்டச் சிறார்களின் கல்வி விடயத்தில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தேசிய அரசாங்கம் தோட்ட மக்களின் நலன்களுக்காகப் பாடுபடும் என்று ஆரம்பத்தில் நம்பப்பட்டது. அந்த நம்பிக்கை வீண் போய் விடுமோ என்று சிலர் அஞ்சுகின்றார்கள்.

இந்நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பகுதியைச் சம்பாதிப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களது பிள்ளைகளின் கல்விக்கா இந்தக் 'கதி' என்று கேட்கிறார் தமிழரசுத் தந்தை அவர்கள்.

தோட்டப் பிள்ளைகளின் கல்விப் பிரச்சினையில் காங்கிரஸ் தலைவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள். மலையகத் தமிழர்களின் துரதிர்ஷ்டம் அத்தலைவர்களின் நாட்டமெல்லாம் 525,000 மக்களை இந்தியாவுக்கு அனுப்பும் முயற்சியிலேயே லயித்திருக்கிறது.

## கோரிக்கையின் வெற்றி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டில் தொழிற் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் நாம் ஓரளவுக்கு வெற்றிக் கண்டிருக்கிறோம். அன்றாட பிரச்சினைகளை வென்றெடுப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை நாம். தொழிலாளர்களின் நலன் கருதி வயோதிபர் பென்சன் பணத்தில் சேமலாப நிதிக்கு ஊழியர் செலுத்தியுள்ள பங்கு கழிக்கப்படுதல், பென்சன் கொடாது வேலை நிறுத்தம் விட்டு பென்சனுக்காக காத்திருக்கச் செய்தல், கொழுந்து நிறுவையில் கழிசன் பிடித்தல், ஆடு வளர்க்க அனுமதி மறுத்தல், இடைவேலைநிறுத்தம் செய்தல், தெண்டம் போடுதல் ஆகிய பொதுப் பிரச்சினைகள் பற்றியும் நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இந் நடவடிக்கைகளில் எமக்கு வெற்றி கிட்டவில்லை. எனினும் தொடர்ந்து போராடும் உறுதியுடனேயே கழகம் இயங்கி வருகிறது.

### தொழில் விசாரணை மன்ற வழக்குகள்

வேலை நீக்கப்பிரச்சினைகளை எதிர்த்து தொழில் விசாரணை மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் பின் வரும் வழக்குகள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு சாதகமான முறையில் சமரசம் காண முடிந்தது.

| தோட்டம் | தொழிலாளர்களின் எண்ணிக்கை | முடிவுகள் |
|---|---|---|
| புரடித் தோட்டம் | 1 | வேலை வழங்கப்பட்டது |
| மாணிக்கவத்தை | 12 | வேலை வழங்கப்பட்டது ரூபா 2000/ நட்டஈடு கொடுக்கப்பட்டது. |
| தென்மதுரை | 2 | 3 மாத சம்பளம் நட்டஈட்டுடன் வேலை வழங்கப்பட்டது. |
| ராசமலை | 1 | வேலை வழங்கப்பட்டது |
| அ/ புதுக்காடு | 5 | தலா ரூபா 10/- நட்டஈடும் வேலையும் வழங்கப்பட்டது. |
| பின்னேயா | 1 | வேலை வழங்கப்பட்டது |
| சி/ அரததோட்டம் | 2 | ,, ,, ,, |
| றக்சாவ | 2 | ரூபா 150/- நட்டஈடு- |
| ஸ்காடு கி/பி. | 1 | வேலைவழங்கப்பட்டது. |

இவற்றைத் தவிர தலவாக்கொல்லை பெ/மட்டுக்கொல்லை தோட்டத்தில் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒருவரின் பிரச்சினைக்காக ரூபா 1500/- நட்டஈடாக பெற்றுக்கொடுக்கப்பட்டு சமரசம் செய்து வைக்கப்பட்டது.

தலவாக்கொல்லையைச் சேர்ந்த அ/புதுக்காடு தோட்டத்திலும் அதே தோட்டத்தைச் சேர்ந்த பனிய கல்பா பிரிவிலும் முறையே 2 நாட்களும், 22 நாட்களும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் குறிப்பிடத் தக்கவை.

அ/புதுக்காடு வேலைநிறுத்தம் தோட்ட நிர்வாகிக்கும் கழக ஊழியர் ஒருவருக்குமிடையில் நடைபெற்ற தகராறு காரணமாகவும் பனியகல்பா பிரிவு வேலை நிறுத்தம் கழகம் அங்கீகரிக்கப்படாதிருந்ததைத் தொடர்ந்தும் நடைபெற்றன. இவ்வேலை நிறுத்தங்களுக்கு காரணமாகவிருந்த பிரச்சினைகள் அனைத்தும் இறுதியில் தொழிலாளர்களுக்கு சாதகமாகவும் சமரசமாகவும் தீர்த்துவைக்கப்பட்டன.

### எமது கோரிக்கைகள்

எமது பத்து அம்ச கோரிக்கைகளில் ஒரு சிலவற்றை பற்றி ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அக்கோரிக்கைகளை நாம் வென்றெடுக்கும் பிரச்சினைகளை தொழிலாளர்கள் இக்கோரிக்கைகளை புரிந்துகொள்வதில் தங்கி இருக்கிறது. எமது கோரிக்கைகளை தெளிவுபடுத்துவதற்காக பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தொழிற்சங்க அமைப்பு சட்ட விதிகள் பற்றியும் லாபத்தில் பங்கு வழங்குவது பற்றியும் ஆராய்வதற்கு அரசாங்கம் நியமித்த ஆணைக்குழுவின் முன் நாம் சாட்சியமளித்தோம். தோட்டங்களில் பலாத்கார சம்பவங்கள் நடப்பதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக தொழில் இலாகா கூட்டிவரும் மாநாடுகளிலும் நாம் பங்கெடுத்து வருகிறோம்.

போயா விடுமுறை நாட்களில் கடைகள் மூடும் உத்தேச சட்டம் தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைஞ்சல்களைகொடுக்கும். எனவே, இத்திட்டம் கைவிடப்படல் வேண்டும் என்றும் தொழில் அமைச்சரைக் கேட்டுள்ளோம்.

### பதவியாளர்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களும் செயற்குழு உறுப்பினர்களும்.

தலைவர்: வ. ந. நவரட்னம் பா. உ.

துணைத் தலைவர்கள்: அ. அமிர்தலிங்கம் பா. உ., மு. எத்திராஜ், பி. சாமன், செனட்டர் மு. மாணிக்கம்.

பொதுச் செயலாளர்: செ. கலியப் பெருமாள்.

துணைச்செயலாளர்கள்: கு. க. சேயோன், கே. பி. செல்லதுரை.

இணைப் பொருளாளர்கள்: செனட்டர் சு. நடராசா, மு. எல்லாளன்.

செயற் குழு உறுப்பினர்கள்: நி. வெ. பஞ்சாண்டி, ரா. ராஜ், ஆர். மாரிமுத்து, வி. பழனியாண்டி, நா. கோவிந்தன், பி. முனுசாமி, கி. கொ. வெங்கடாசலம், எம். பி. வர்ணன், கு. இராமலிங்கம், மு. பெருமாள், சு. சி. சுப்பிரமணியம், நா. முனியன், மு. நல்லதம்பி, சி. இராமையா, ந. அ. சின்னதம்பி, வி. கிருஷ்ணசாமி, ஜே. எஸ். பெஞ்சமென், எஸ். கே. முத்தையா, வி. ஆறுமுகம்.

## மறைந்த தமிழறிஞர் வேந்தனார் பற்றி

'புதுமை லோலன்' அவர்களும், 'பூங்குன்றன்' அவர்களும் எழுதும் கட்டுரைகள்

அடுத்த இதழில் வெளியாகும்.


## அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

பண்டார மந்திராச்சாரியார் அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.



# தொழிற்சங்கவாதி பழிவாங்கப்படுகிறார்

## மட்டக்களப்புக் கச்சேரியில் தமிழ்த் துவேச நடவடிக்கை

தொழிற்சங்க வாதிகளைப் பழிவாங்கும் முயற்சியில் மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் பகிரங்கமாக ஈடுபட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. இப் பழிவாங்கும் படலத்தின் ஒருஅம்சமாக 'காணி அபிவிருத்தித்திட்ட மேற்பார்வையாளர் சங்கத்தின் செயலாளரை எக்காரணமுமின்றி நகருக்குப் 18 மைல்களுக்கு அப்பால் இவர் இடமாற்றஞ் செய்திருக்கிறார். இத்துடன் தமிழ் துவேஷத்தையும் இவர் மட்டக்களப்புக் கச்சேரியில் ஏற்படுத்தி வருகிறார் என்று அறியப்படுகிறது.

'காணி அபிவிருத்தித் திட்ட மேற்பார்வையாளர் சங்கம்' அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மொழிவழித் தொழிற்சங்கமாகும். இதன் தலைமை அலுவலகம் மட்டக்களப்பில் அமைந்துள்ளது. அதன் செயலாளராக திரு. சி. பெரியதம்பி கடமையாற்றிவருகிறார்.

திரு. பெரியதம்பியின் அயராத உழைப்புக் காரணமாக இச்சங்கம் ஒரு பெரிய சக்தி வாய்ந்த இயக்கமாக வளர்ந்துவிட்டது. இதனை விரும்பாத உதவி அரசாங்க அதிபர் சங்கத்தினரின் அடிப்படை உரிமைகளிலேயே இப்பொழுது கைவைக்க ஆரம்பித்திருக்கிறார் என்று தெரிகிறது.

சங்கத்தின் சார்பில் திரு. பெரியதம்பி மட்டக்களப்புக் கச்சேரியுடன் கொள்ளும் கடிதத் தொடர்புகள் தமிழ் மொழிமூலமே நடைபெற்று வருகிறது. இதனை விரும்பாத உதவி அரசாங்க அதிபர் அண்மையில்சங்கத்தின்செயலாளரை அழைத்துக் கச்சேரியுடன் கொள்ளும் கடிதத் தொடர்புகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு சிங்கள மொழிபெயர்ப்புடன் அனுப்பப்படவேண்டும் என்று உத்தரவிட்டாராம். இதனை அறிந்த மொழிவழித் தொழிற்சங்க சம்மேளனச் செயலாளர் திரு. செ.கோடீசுவரன் அவர்கள் உதவி அரசாங்க அதிபரின் போக்கை வன்மையாகக் கண்டித்துபகிரங்க அறிக்கைஒன்றைவெளியிட்டார். திரு. கோடீசுவரனின் அறிக்கையைக் கண்ணுற்றதும் திரு. மகாதேவன் மேல் குற்றங்காண முயற்சிகள் நடைபெற்றதாம். அம் முயற்சிவெற்றிகொடுக்காது போகவே, இப்பொழுது அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

திரு. பெரியதம்பி மட்டக்களப்பு நகர எல்லைக்குள் கடமையாற்றத் தொடங்கி நாலு ஆண்டுகள் தானும் பூர்த்தியாகவில்லை. இந்நிலையில் அவர் நகருக்கு வெளியே 18 மைல்களுக்கு அப்பால் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

திறைசேரி சுற்று நிருபம் இல: 359-ம் பிரகாரம் இவ்விடமாற்றம் முறையற்றது என்பதைச் சுட்டிக்காட்டி திரு. கோடீசுவரன் காணி அமைச்சு ஆணையாளருக்குக் கடிதம் எழுதியதுடன் தனது துணைச் செயலாளர் திரு. அ. புவனேசனுடன் சென்று ஆணையாளரிடம்விடயத்தை நேரிலும் எடுத்துக்கூறினார். திரு. கோடீசுவரனின்தொடர்ச்சியான நெருக்குதல்காரணமாக இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டது. இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டு 15 நாட்களுக்குமேலாகியும் மட்டக்களப்புக் கச்சேரியிலிருந்து திரு. பெரியதம்பிக்கு எத்தகைய அறிவித்தலும் இற்றைவரை அனுப்பப்படவில்லை என்பது தெரிகிறது. இதுபற்றி மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் மூதவையில் இரு தடவைகள் பேசியிருக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

## த. அ. வா. மு. கைதடிக்கிளை

மேற்படிக் கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டம் 11-8-66 வியாழக்கிழமைமாலை 6மணியளவில் கைதடி இளைஞர் கழக மண்டபத்தில் தலைவர் திரு. வ. சுப்பையா அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. தமிழரசு வாலிப முன்னணியின் தலைமை நிர்வாகச்செயலாளரும் மற்றும் பிரதிநிதிகளும் சமூகம் கொடுத்திருந்தார்கள். நடப்புவருடஉத்தியோகத்தர்களாக கீழ் கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- வ. சுப்பையா.

உப-தலைவர்:- மு. துரையப்பா.

செயலாளர்:- அ. ஆ. கந்தையா.

உப-செயலாளர்:- க. கனகராசா.

பொருளாளர்:- சு. சின்னத்துரை.

# சங்கப் பலகை

## தாலி சிரித்தது

ஆசிரியர்:- மலையமான்

விலை:- ரூபா இரண்டு

வெளியீடு:- தேனருவி பிரசுராலயம், 20, ரேகினி ஒழுங்கை. வெள்ளவத்தை, கொழும்பு.

விமர்சகர்:- சித்தார்த்தன்.

கடந்த சில ஆண்டுகளாக ஈழத்து இளைஞர் மத்தியில் நாட்டினது இலக்கியப் போக்குப் பற்றிய சிந்தனைகள் எழுந்து கொண்டிருக்கின்றன. பிறநாட்டு இலக்கியப் போக்கினையும் வளர்ச்சிகளையும் சிந்தனைகளையும் அவதானித்து வந்த இவர்களிடையே தம் நாட்டைப்பற்றிய சிந்தனைகள் ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்தின. உதாரணமாக 1961-64ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் சிந்தனைகளை நூல் வடிவில் வெளியிட்டமை நம் நாட்டு இலக்கியம் பற்றிய சிந்தனைகளின் தீவிர தாக்குதல்களாலேயே ஆகும். அதே போல் பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்த மாணவ(அல்லது இளைஞர்களும்)ர்களும் இந்தப் பாதிப்புக்கு ஆளாகவே தங்கள் படைப்புகளை வெளியிட ஏற்ற காலத்தினை தேடினர். பத்திரிகைகள் இவர்கள் தேவைக்கு உதயளிக்கவில்லை. எனவே பல இளைஞர்கள் தங்கள் முயற்சியில் பின் வாங்க,சிலர் துணிச்சலுடன் முன்னேறினார்கள். அவர்களில் ஒருவராக—

ஆர்வமிக்க இந்த இளைஞர் மலையமானைக்கூறலாம், இவரது கல்விப்பயிற்சி,வாழ்க்கை அனுபவம், எழுத்துலகத் தொடர்பு ஆகியவற்றின் கால அளவுகள் மிகச் சொற்பம் என்பதனை கடைசியில் தரப்பட்டுள்ள விபரங்கள் உணர்த்தினாலும்- அவரின் எழுத்தை நோக்கும் போது சில நம்பிக்கையான சூசனைகள் நமக்குப் புலனாகாமற் போகவில்லை.

ஆசிரியர் இளைஞர் ஆனமையால் சமூகத்தில் பல்வகைப்பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வுகண்டு விடலாமென்ற அவசர உணர்வையே அவரின் கதைகள் உணர்த்துகின்றன. இக்கோவையில் கடற்பஞ்சு, பசியும் பாசமும், மின்னல் -போன்ற கதைகள் ஒரு நல்ல எதிர்கால எழுத்தாளனை இனம் காட்டுகின்றன.

கடற் பஞ்சு- ஒரு மீனவனின் வாழ்வை அவன்- மன உணர்வைச் சித்திரிக்கிறது. பசியும் பாசமும்- நம் நாட்டுப் பிரச்சனை மட்டுமல்ல; உலகப் பிரச்சனை. ஆமாம் பசிப்பிரச்சனை வயிற்றின் முன் பாச உணர்வுகள் எப்படிச் சருகாகின்றன என்பதைக் காட்டுகின்றது. மின்னல் ஆசிரியரின் இனவுணர்வைமீறி நிற்கும் மனிதப் பண்பின் முதிர்ச்சியின் உயர்வைக்காட்டுகிறது.

ஆசிரியர் அழகான உரை நடையைக் கையாள முற்படுகிறார். அதே போல, புதிய உவமை, உருவகங்களையும் கையாளுகிறார். சில இடங்களில் அவை கேலிக்கூத்தாகி விடுகின்றன. ஆசிரியர் வளரவேண்டியவர்.

## 60,000 ரூபா செலவில் அமரருக்கு உருவச் சிலை

அமரர் வன்னிய சிங்கம் நினைவு நாளன்று, அன்னாருக்கு யாழ்ப்பாணத்தில் ஓர் சிலை நிறுவும் ஆலோசனைக் கூட்டம், தமிழரசுக்கட்சிப் பணிமனையில், மேற்சபை உறுப்பினர் சு நடராசா தலைமையில் நடைபெற்றது.

'60,000 ரூபா வரை செலவாகலாம் எனவும்; அப்பணத்தைப் பொது மக்களிடமும், கலை நிகழ்ச்சிகள் மூலமும் திரட்டுவதெனவும், அந்த ஆண்டில் சிலையை

(11-ம் பக்கம் பார்க்க)

---

அண்மையில் நிகழ்ந்த பாரதி நினைவுக் கவிதைப் போட்டிக்கு வந்த கவிதைகளைப் பரிசிலனை செய்து கொழும்பு சரசுவதி மண்டபத்தில் பரிசளிப்பின் போது நிகழ்த்திய—

# நடுவர் உரை

"மஹாகவி"



பாரதி என்ற பழைய தமிழ்க் கவிஞன்
சிரழிந்து செத்த சில ஆண்டில், 'அந்தா'ளின்
பாட்டைச் சிலபேர் படிக்கத் தொடங்கினர்.
ஓட்டைக் கவிதை, உடைசற் கவிதைகளே
ஏட்டில் பெரிதாக ஏறி அரசாண்ட
காலத்தில், அந்தக் கலைஞன் புதிதான
வாலைக் கவிதை சில செய்து வழங்கினன்.
கோயிற் புராணம், குளத்துப் புராணங்கள்
ஆய மலிந்திருந்த அக்காலம், எக்காலும்
மீளாத வண்ணம் விரட்டிப், புதுக் கவிதை
வாழ வழிகள் வகுத்தான்—அவன் வாழ்க!

பாரதியை மெச்சும் பழக்கம் தமிழ்ச் சினிமாக்
காரருக்கும் வந்த பிறகு, "தமிழறிந்த
தீர் எதற்கு வந்து குழுமி நிறைந்துள்ளீர்?"
என்ற தோர் கேள்வி எழுதற்கு இடமில்லை!
இன்றும், இனியும், இனி என்றும், எங்கள்
மொழி
என்று வரையும் உளதோ-அது வரையும்,
முன்றலிலே, வீதி முடக்கிலே, முந்தலிலே,
குன்றில், குழைக் காட்டில், கொட்டகையில்,
கூரையில்லா
மண்டபத்தில், பள்ளி வளவில் வயற் புறத்தில்
எந்த இடத்தில் இளந் தமிழர் கூடுவது
நன்றே, அங்கெல்லாம் விழா நடத்துவதே
அன்றே நமதலுவல் ஆக அமைத்துள்ளோம்!

பாரதி வாழ்ந்த பொழுது, இப் பர பரப்பில்
ஓர் சிறிது கூடத் தமிழர்கள் உற்றிருந்தால்—
கூரை ஒழுகாத வீட்டிற் குடி இருந்து, அவ்
வீட்டுக்கு வானம் ஒழுங்காக வீசிவிட்டு,
நீட்டுக்கு வந்து நெருக்குகின்ற செட்டிக்குப்,
பாட்டிலே அல்ல-பணத்தால் பதில் கொடுத்து
விட்டுத், தமிழின் விடிவைத் தியானித்துக்
கட்டியிருப் பான் கவிதைகளை! செல்லம்மாள்
கட்டியிருந்திருப்பாள் தானும்-கிழியாத
பட்டுப் புடவை! பைத்தியம் போல் தன்னுடைய
நாட்டை, அந்நாட்டார் மொழியை
நலிவுறுத்தும்
கேட்டைத் துடைக்கும் கிருத்தியத்தில் முற்றாக
ஈடுபட்டு வாழ்ந்திருப்பான்! எங்களுக்கு
நித்தநித்தம்
பாடுபட்டுச் செய்து படைத்திருப்பான்
காவியங்கள்!
பஞ்சியிலே செய்த குயிற்பாட்டைப் போலன்றி,
விஞ்சும் கவிதை வெறியை நெறிப்படுத்தி,
இப்போது நாங்கள் எழுதும் கவிதைகள் போல்,
அப்போதே தந்திருத்தல் ஆகும்! எனில்
ஐயகோ-
அப்போது நாங்கள் அவனை அல்ல-கம்பனையோ,
எப்போதோ செத்த எவனையோ, போற்றி
நின்றோம்!

வாழும் கவிஞர் வலியப் புறக்கணிக்கும்
கோழைத் தனமும், மடிந்த குறுங்கவிஞர்
ஏழ்மைக் கவியை "எடுப்பு!" என்று தூக்குகிற
சிழ்லமத் தனமும், ஒழிக! இறுகிறென்று அப்
பாரதிதான் செய்த பணியால், பலர் பலராய்
ஊரில் உதிக்கும் உயர்ந்த கவிஞர்களின்—
பேரை அறிக! பெரிதும் அவர்முயன்று
செய்து தரும் நூலைத் தேடிச், சிறப்புணர்ந்து,
கையில் எடுத்துக், கவனித்து, அவைகளை நாம்
கொஞ்சம் படித்தால்-கொழும்பும் தமிழ்
வளர்க்கும்!
பிஞ்சிலே வெம்பி விழாமல், பெரிதாகி,
முற்றிக், கனிந்து, முழுமைப் பழமாகி
இற்றைக் கவிதை இனிக்கட்டும், எங்களுக்கு!

போட்டி ஒன்றுவைத்துப் பொறுக்கி எடுத்த சில
பாட்டுப் படைத்தவரைப் பாராட்ட முன்வந்தார்,
ஏற்றுமதியும், இறக்குமதியுமே
ஆற்றும் தொழிலாய் அமைந்த
திணைக்களத்தார்,
ஏற்றுமதியும் இறக்குமதியுமே
ஆற்றும் தொழிலாய் அமைந்தோர்,
கவிஞர்களைப்
போற்றும் புதிய பணிக்குள் புகுந்தமையை,
ஏற்றல் இனிதாகும்! ஏற்றல் இனிதாகும்!...
தங்கப் பதக்கம் தரும் இவ் வினைஞருக்கு!

எங்கள் மதிப்பை இழக்காமல், என்றென்றும்
தங்கக் கவிகள் தரல் வேண்டும் தம்பி நீ!
மற்ற இளைஞர் முயல்க, மறுபடியும்!
அற்புதங்கள் செய்திடலாம், ஆசை
உளத்திருந்தால்!
"செந்தமிழ் நாடென்ற போதினிலே"ப்
பாட்டுக்குப்
பாரதிக்கு மூன்றும் பரிசு கொடுத்தார்கள்,
அந்நாளில் என் பதறிவீர்! அதனாலே,
மீண்டும் முயல்க விளைகவே வெற்றிகள்!
வேண்டிய வாறே கவிதை விரைந்தனுப்பிப்
பங்கு கொண்ட மற்றப் பலருக்கும் நன்றிகள்!

எங்கும் "நறுங்கவிதை!" என்பதே பேச்சாகி,
சங்கங்கள் இன்றும் வளர்க்கும் பெரிய தமிழ்
பொங்கி வளர்க, பொலிந்து!

# மகாகவி பாரதியின் சொல்வளம்

மகா கவி பாரதியாரின் கவிதைகளிலே 'சொல்'— என்ற தலைப்புடன் மகுடமிட்டுத் தொடங்கப்பெற்றிருக்கும் கவிதையைப் பலர் பார்த்திருக்கலாம். சிலர் பார்க்காமல் தவறவும் விட்டிருக்கலாம். கவிதையிலோ வசனத்திலோ சக்தி கனிந்து நிறைந்த வலிமையான சொற்கள் ஒன்றுபட்டு இணைய வேண்டுமென்று கருதியவர் பாரதியார். போர்க்களங்களில் முன்னணிப் படையில் நின்று அஞ்சாமல் தயங்காமல் போரிடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஆற்றல் வாய்ந்த வீரர்களைப் போல் வலிமை வாய்ந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து இணைக்கும் திறமையைப் பாரதியாரின் கவிதைகளிலே காணலாம். 'சொல்'- என்ற தம் கவிதையின் தொடக்கத்தில் பாரதியாரே கூறுகிறார் :-

"சொல் ஒன்று வேண்டும்
தேவசக்திகளை நம்முள்ளே
நிலைபெறச் செய்யும்
சொல் ஒன்று வேண்டும்"-

சொற்களிலும் ஆண்மை பெண்மை - பேடித்தன்மை - எல்லாம் இருப்பதாகக் கொள்வதில் தவறில்லை. இங்கு ஆண்மை என்பது வலிமை. பெண்மை என்பது நளினம். இந்த இரண்டுவகையிலுமே அடங்காத நலிந்த சொல்லாக்கத்தைப் பேடித்தனமான சொற்கள் என்று கூறி இகழ வேண்டியதுதான். ஆண்மை நிறைந்த சொல் நடையைப் பாரதியாரிடம் நிறையக் காண முடியும். சில பகுதிகளில் பெண்மையின் நளினமான சொல் நடையையும் காணமுடியும். இரண்டுமற்ற நலிந்த சொல் நடையைத் தேடிப் பார்த்தாலும் பாரதியாரில் காண முடியாது. சில தொடர்கள், சில சொற்கள் - பாரதியாருடைய ஆட்சியில் இணைந்திருப்பதைப் போல் அத்தனை வலிமையாகவும், அழகாகவும், வேறெவருடைய சொல் ஆட்சியிலும் இணைய முடியாதென்று நாம் நினைந்து நினைந்து வியக்கவேண்டியிருக்கிறது. பாரதியாரின் இத்தத் திறமையை வியக்கும் போதெல்லாம்,

Heaven and earth shall pass away
But my words shall not pass away

என்ற 'புதிய ஏற்பாட்டு' வாக்கியத்தை நினைவு கொள்வேன். மாபெரும் கவிகளின் கூட்டத்தில் பாரதியின் குரலும் சொல்லும் மட்டுமே தனி ஆவேசத்தோடும் மனிதாபிமானத்தோடும் கம்பீரமாய் ஒலிப்பதாகக் கற்பித்துக்கொண்டு பெருமைப்படுவேன்

"See how your words come
From you in a crowd"

என்று 'ராபர்ட்ரிப் ரௌனிங்' வியந்த மாதிரிப் பாரதியை வியந்து எனக்குள் பலமுறை பெருமைப்பட்டிருக்கிறேன். குரலின் இனிமை அழகாயிருக்கலாம். ஆனால் அதே குரலினிமை ஏதாவதொரு ராகத்தோடு ஏதாவதொரு பாட்டின் வடிவில் வெளிப்படும் போது நிச்சயமான இனிமையாகிறது. சொற்கள் அழகாகவும் வலிமையாகவும் அகராதியில் நிறைந்து கிடக்கலாம். ஆனால் பாரதியைப் போல் சக்தி வாய்ந்த ஒரு கவி அவற்றைப் பயன்படுத்தி இணைக்கும் போது அவற்றின் இயல்பான வலிமையும் அழகும் பெருகுகின்றன.

## நா. பார்த்தசாரதி

### பாரதியாரின் சொல்லாட்சி

'How forcible are right words?' என்று கொண்டாடிப் புகழத் தோன்றும் சக்தி வாய்ந்த சொல்லாட்சியைப் பாரதியாரின் கவிதைகளில் மிகப்பல இடங்களில் உணர்கிறோம். மாதிரிக்கு ஒன்றிரண்டு பார்க்கலாம்.

புல்லடிமைத்தொழில்
பேணிப் பண்டு
போயின் நாட்களுக்கு
இனி மனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள்
தீர-இந்தத்
தொண்டு நிலைமையைத்
தூவென்று தள்ளி.'

இந்தவந்தேமாதர கீதத்தில் 'புல்லடிமைத்தொழில்' -என்ற தொடரும் 'தூவென்று தள்ளி' - என்ற தொடரும் எத்தனை வேகமாகவும் ஆழமாகவும் ஒலிக்கின்றன என்பதைச் சொல்லிப்பாருங்கள். 'புல்லடிமை' என்று அழுத்திச் சொல்லும்போது அடிமைத்தனத்தின் அவலமும், 'தூவென்று தள்ளி' என்னும் போது அதிலிருந்து விடுபடத் துடிக்கிறவனின் தவிப்பும் எத்தனை சக்தி வாய்ந்த சொற்களாக வெளி வருகின்றன என்பதை நன்றாக உணர முடிகிறது. இயற்கை வருணைனைகளாக வருகிற தொடர்களிலும் எளிமையும் இனிமையும் நிறைந்த செழிப்பான சொற்களைப் பாரதியார் இணைக்கிறார். பாரத தேசத்தை வருணித்துத் தொடங்கும் 'வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்' என்ற கவிதையில் இமயமலையின் ஒளி, குளிர்ச்சி, கம்பீரம், அழகு, பெருமை, தெய்வீகத்தன்மை, ஆறு குணங்கள் 'வெள்ளிப் பனிமலை' என்ற மூன்றே மூன்று சொற்களில் சொல்லி சக்தி மிக்க தொடரைப் படைக்க முடிகிறது நம் கவிஞரால். புதுமைப் பெண்ணைப் பற்றிய பாடலில் மிக அழகாகவும் அபூர்வமாகவும் இணைந்த சில பதச் சேர்க்கைகள் வாய்த்திருக்கின்றன.

'திமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த 'ஞானச்
செருக்'கும்
இருப்பதால்
செம்மை மாதர்
திறம்புவதில்லையாம்'—

இதில் 'ஞானச்செருக்கு' என்ற சொற்றொடர் எத்தனை சக்தி வாய்ந்த பதச் சேர்க்கையாக வாய்த்திருக்கிறது என்று பாருங்கள்! இந்தச் சொற்கள் பாரதியாரின் கவிதை ஆவேசத்தில் தான் முதன்முதலாக இத்தனை ஆற்றலோடு இணைகின்றன. இதே 'புதுமைப்பெண்'— என்ற தலைப்பில் மற்றொரு பாடலில்

'சாத்திரங்கள் பல பல
கற்பபராம்'
சவுரியங்கள் பலப்பல
செய்வராம்
'மூத்த பொய்மைகள்'
யாவும் அழிப்பராம்'—

—என்று வருகிறது. 'கிழட்டுப் பொய்கள்' என்றால் மிகவும் கொச்சையாயிருக்கும். 'பழம் பொய்கள்' என்றால் மிகவும் சாதாரணமாயிருக்கும். நயமாகவும் புதுமையாகவும் 'மூத்த பொய்மைகள்' என்று ஒரு சாதுரியமான தொடரை உருவாக்கி விடுகிறார் பாரதியார். பொய்யே கெடுதலானது. அதிலும் மூத்துத் தளர்ந்துபோன பொய் என்பது படச் சொல்லியிருக்கும் அழகுக்கு இணையே இல்லை. பூர்ண சந்திரனை எத்தனையோ பழைய கவிகளும், புதுக் கவிகளும் விதவிதமாக வருணித்திருக்கிறார்கள். ஆனால் 'பொங்கி வரும் பெருநிலவு' போன்ற ஒளி முகமும்- என்று ஒரே ஒரு தொடரில் முழு நிலவின் பரிபூரணமான அழகு பொங்குவதைப் பாரதியையன்றி வேறொருவரால் இத்தனை கச்சிதமாகச் சொல்ல முடியுமா? 'சுய சரிதையில் ஓரிடத்தில்

தேனகத்த
மணிமொழியாளொடு
'தெய்வ நாட்கள்' பல
கழித்தேனரோ'

என்று வரும், மங்கல நாள், மண நாள், புண்ணியப் பெருநாள் திருநாள், என்றெல்லாம் நாளுக்கு அடைமொழி கொடுத்து வருணித்திருப்பதைப் பல இடங்களில் பலருடைய கவிதைகளில் படித்திருக்கிறோம். அத்தனை அடைமொழிகளையும் விட நிறைந்த அழகோடு 'தெய்வ நாட்கள்' (Divine days) என்று ஒரு புதிய பதச் சேர்க்கையைச் செய்கிறார் பாரதியார். 'தெய்வ நாட்கள்' என்று சொல்லிப் பார்க்கும் போது வாய் நிறைய ஒலிக்கவில்லையா இந்தத் தொடர்?

இன்னும் பாஞ்சாலி சபதத்தில் துச்சாதனன் திரௌபதியைத் துகிலுரியுங்கால் கவிக் கூற்றாக,

விரமிலா நாய்கள்
விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத்
தராதலத்திற் போக்கியே
பொன்னை யவளந்தப்
புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென
நின்று புலம்பினார்
'பெட்டைப் புலம்பல்'
பிறர்க்குத் துணையாமோ?

என்று பாடப் பெறுகிற பகுதியில் 'பெட்டைப் புலம்பல்' என்ற சொற்களின் இணைப்பு எவ்வளவு பெரிய சவுக்கடி போல் விழுகிறது பாருங்கள்! பாரதி மிக நளினமாகத் தொடுத்திருக்கும் சக்தி வாய்ந்த சொற்றொடர்களும் சில இடங்களில் உண்டு. கண்ணம்மாவின் எழில்'—என்ற பாடலில் மூன்றாவது பகுதியில்,

'இங்கித நாத நிலையம்'
இரு செவி
சங்கு நிகர்த்த கண்டம்
அமிர்த சங்கம்'

என்றுவரும் இடத்தில் 'இங்கிதநாத நிலையம்'—என்னும் பதத் தொடுப்பு எத்தனையோ அற்புதமாய் வாய்த்திருக்கிறது. 'சந்திரமதிப் பாடலில் நாலாவது பகுதியில், 'கால நடையினிலே நின்றன் காதல் விளங்குதடி —என்று வரும். இதில் 'கால நடை' என்ற சொற் சேர்க்கை சொல்லிப் பார்ப்பதற்கும் எவ்வளவு நயமாகப் பொருந்தியிருக்கிறதோ அவ்வளவு நயமாகப் பொருந்தும் சக்தி வேறெந்தச் சொற்றொடருக்கும் இருக்க முடியாது. புதிய தமிழ்க் கவிதையின் பரம்பரையைத் தொடங்கி வைக்கிற முதற் கவியரசர் பாரதியார். அவருடைய கவிதைகளிலே சொல் புதிது, பொருள் புதிது, நயம் புதிது, பாரதியார் படைத்த சில பெரிய கவிதைகளை எல்லாம் விடச் சிற்சில இடங்களில் வாய்த்திருக்கும் தனித் தனிச் சொற்றொடர்கள் மட்டுமே மகா காவியங்களைப்போல் அத்தனை அபூர்வ சக்தி பெற்று நிற்கின்றன. 'மங்கள வாக்கு நித்தியானந்த ஊற்று—என்று ஓரிடத்தில் வரும். நலிந்து சாரமில்லாமல் மெல்ல நகரும் பயனற்ற நாட்களைப்பற்றி 'முடம்படு தினங்கள்'—(தெய்வநாட்கள் என்று வேறொரு இடத்தில் கூறியதுபோல) என்ற கவியழகு வாய்ந்த சொற்றொடரால் ஓரிடத்தில் கூறியிருக்கிறார் பாரதியார்.

(15-ம் பக்கம் பார்க்க)





'தீபம்' பத்திரிகை ஆசிரியரும், பிரபல நாவலாசிரியருமான திரு. நா. பார்த்தசாரதி அவர்கள், முகத்துவாரம் அருணாசலேசுவரர் கோவிலில் 'விஞ்ஞானமும் இந்து சமயமும்' என்னும் பொருள் பற்றி பேசிக் கொண்டிருப்பதையும் அவரின் பேச்சைக் கேட்பதற்குத் திரண்டிருந்த மக்களில் ஒரு பகுதியினரையும் காண்க.

—படம்: கோபி.


## ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும்; சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# சுதந்திரன்
SUTANTIRAN

1966 செப்டெம்பர் மாதம் 28-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 8411 த. பெ. 1188


## அதிர்ச்சி வைத்தியம்!

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறுகிறது. இதற்கு முன்பு நடைபெற்ற 20 பொதுச்சபைக் கூட்டங்களைவிட இக் கூட்டம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. காரணம், வியட்நாம் பிரச்சினைக்கும் மேற்கு ஆபிரிக்கப்பிரச்சினைக்கும் இக்கூட்டத்தில் ஒரு தீர்வு ஏற்படுமென்று உலகம்எதிர்பார்ப்பதே. பொதுச் செயலாளர் யூதாண்டின் பதவிதுறப்புப்பயமுறுத்தலும்இக் கூட்டத்திற்கு முக்கியத்துவத்தை அளித்துள்ளது.

யூதாண்ட் ஒரு மாபெரும் இராஜதந்திரி. வியட்நாம்தகராறுக்கு ஒரு முடிவு காண்பதற்காக கடந்தகாலத்தில் பெருமுயற்சி செய்தவர். வியட்நாமிலிருந்து உலக யுத்தம் வெடித்துவிடக் கூடாது என்பது அவரது கவலை. அத்துடன் அவர் ஓர் ஆசியாக்காரர்—பௌத்தர். வல்லரசுகளின் கெடுபிடியின் காரணமாக வியட்நாம் மக்கள் வீணுகக் கொல்லப்படுவதைக் காண அவர் உள்ளம் கொதிப்படைகிறது.

ஆதலின், இறுதியாக ஐ நா. வுக்கு ஓர் அதிர்ச்சிவைத்தியம் செய்வதின் மூலம் வியட்நாம் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவர் முன்வந்துள்ளார். இஃது அவரது இராஜதந்திரத் திறமையாகும்.

யூதாண்ட் முதலில் தமது பதவிதுறப்பு பயமுறுத்தலை விடுத்தார். வல்லரசுகளின் போக்கும், ஆதிக்கப் போட்டியும், அவை வியட்நாம் பிரச்சினையில் காட்டும் பிடிவாதமுமே அவர் தொடர்ந்து பதவிவகிக்க முடியாத நிலையை உருவாக்கியுள்ளது என்ற எண்ணத்தை ஐ. நா. அங்கத்துவ நாடுகளிடையே ஏற்படுத்தினர்.

அடுத்து, தூக்கிப்போட்டார் மற்றொரு குண்டை; அதுதான் அவரது வருடாந்த அறிக்கை. இந்த அறிக்கை வல்லரசுகளுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அமெரிக்காவின் போர்க் கொள்கையை யூதாண்ட் தம் அறிக்கையில் வன்மையாகச் சாடியுள்ளார். அமெரிக்கா வியட்நாமில் நடத்தும் யுத்தத்தை கடுமையாகக் கண்டிக்கும் யூதாண்ட் வியட்நாம் தகராறை யுத்தத்தால் தீர்க்க முயற்சி செய்வது மிலேச்சத்தனமென்றும், இருபதாம் நூற்றுண்டு மிலேச்சத்தனமான சகாப்தம் அன்று என்றும் இடித்துக் கூறுகிறார்.

பிரிட்டனையும் அவர் விட்டுவிடவில்லை. ரொடீஷியா விடயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் கையாளும் கொள்கையையும் கண்டித்திருக்கிறார். ஸ்மித்தின் அரசாங்கத்தை வீழ்த்த இதைவிடத் தீர்க்கமான, திடமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பிரிட்டனை வற்புறுத்துகிறார்;

இதற்குமுன்பு ஐ. நா. வின் வரலாற்றிலே ஐ. நா' பொதுச் செயலாளர் ஒருவர் வல்லரசுகள்மீது இத்தகைய கடுமையான தாக்குதலைத்தொடுத்ததுகிடையாது. யூதாண்டின் இராஜிநாமா பயமுறுத்தலும், வருடாந்த அறிக்கையும் ஐ. நா.வை மட்டுமின்றி வல்லரசுகளையும் அதிர்ச்சியடையச் செய்துவிட்டன.

இந்த அதிர்ச்சி வைத்தியத்தையொட்டி யூதாண்டின் 3-அம்ச வியட்நாம் திட்டம் வெளியாயிற்று. யூதாண்டின் இராஜதந்திரப் பிடியில் சிக்கிக்கொண்ட அமெரிக்கா அவரது வியட்நாம் திட்டத்தை நிராகரிக்க முடியவில்லை. அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைமைக்கு அமெரிக்காவை யூதாண்ட் தள்ளிவிட்டார்.

அமெரிக்கா திட்டத்தை ஏற்க சிலநிபந்தனைகளைவிதிக்க முயற்சி செய்கிறதெனினும், யூதாண்ட்திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தென் வியட்நாமில் போரா நடத்தும் வியட் காங்கியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா இதுவரை மறுத்துவந்தது. யூதாண்டின் திட்டம் அமெரிக்காவின் அந்தப் பிடிவாத நிலையையும் மாற்றி விடுகிறது.

வட வியட்நாம்மீது நடத்தும் குண்டுவீச்சை நிறுத்தி, பிரச்சினைபற்றி வியட் காங்கியர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்த யூதாண்ட் திட்டம் வழிவகுப்பதால், பிரச்சினையைத் தீர்க்க வேறு வழி என்னவேண்டும்?

சோவியத் யூனியனும் அமெரிக்காவுடன் யூதாண்ட் திட்டம்பற்றி சுமுகமான முறையில் பேச்சு வார்த்தை நடத்துகிறது இந்திய—பாக்கிஸ்தான் தகராறையே டாஷ்கெண்டில் தீர்த்து வைத்த நாடல்லவா ரஷியா மற்றொரு 'டாஷ்கெண்டை' நடத்தி வியட்நாம் பிரச்சினையையும் தீர்த்து வைக்கும்படி ரஷியாவை அழைத்திருக்கிறது பிலிப்பைன். பிலிப்பைன் அமெரிக்காவுக்குச் சாதகமாக தென்வியட்நாமுக்குத் துருப்புக்களை அனுப்பியுள்ள நாடு. அதுவே மற்றொரு "டாஷ்கெண்டை" நடத்தும்படி கேட்கிறது.

தற்போதைய சூழ்நிலையைப் பார்க்கும்போது ஐ. நா பொதுச்சபைக்கூட்டம் முடியுமுன்பு வியட்நாம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி பிறக்குமென்று நம்பலாம். வழிபிறந்தால் அது யூதாண்டின் இராஜதந்திர வெற்றியாகவே இருக்கும்.

ஐ. நா வில் இலங்கைத்தூது கோஷ்டியைப் பற்றி வந்துள்ள செய்திகள் நமக்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறது. இந்தக் கோஷ்டியிடம் ஆசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்தத் திட்டமும் கிடையாதென்றும், வெறுங்கையுடன்தான் ஐ. நா. வுக்கு வந்திருக்கிறார்களென்றும் ஐ நா. வட்டாரங்களிலிருந்து கிடைத்துள்ள செய்திகளை பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன. இது பரிதாபம் மட்டுமன்றி வெட்கக் கேடான தகவலுமாகும். இத்தகைய தூதுகோஷ்டியினரை ஏன் அரசாங்க செலவில் அங்கு அனுப்பிவைக்க வேண்டுமோ நமக்குத் தெரியவில்லை!

# பிரச்சினைகளுக்கு முடிவு வேண்டும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை இவ் வாரம் யாழ்ப்பாணத்தில் கூடுகிறது. இக் கூட்டத்தில் பல முக்கிய பிரச்சினைகள் ஆராயப்படும் என்றும், இக் கூட்டம் சில வழிகளில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்றும் செய்திகள் கூறுகின்றன. தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினைபற்றிய திறைசேரிச் சுற்று நிருபம் இரண்டும் வெளியான பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டம் இது. மேலும் இக் கூட்டத்தில் போதனுமொழி பற்றியும், சிங்கள ஆசிரியர்களைக் தமிழ் பகுதிக்கு அனுப்புவதுபற்றிய பிரச்சினை பற்றியும் ஆராயப்படலாம்.

இப்பிரச்சினைகளைவிட சிறுபான்மைத் தமிழர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படலாம். பொதுவில் இப் பொதுச் சபைக் கூட்டம் தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினைகளை ஆராயும் ஒரு சிறு மாநாடு என்று கூறுவது சாலவும் பொருத்தமானதாக இருக்கும்.

திறைசேரி புதிய சுற்று நிருபம் இரண்டையும் வாபஸ் பெறும் வண்ணம் தமிழ் அரசாங்க ஊழியர் சம்பந்தப்பட்ட அரசாங்க எழுது வினைஞர் சங்கமும் அஞ்சல் எழுதுவினைஞர் சங்கமும் கோரியிருக்கின்றன. இதே போன்று தமிழரசு வாலிப முன்னணியும், தமிழரசுக் கட்சிக்கிளைகள் சிலவும் கூட இச் சுற்று நிருபம் ஒரு கண் துடைப்பு என்றும், இவற்றை வாபஸ் பெற வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றன.

இச் சுற்று நிருபங்களைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கும் தமிழரசுக் கட்சிக்கிளைகள் ஓர் உண்மையையும் சுட்டிக் காட்டியிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருப்பது போன்ற கருத்துப்பட ஒரு சுற்று நிருபத்தை வெளியிட்டால் நிலைமை சீரடையும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

### ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனம்

ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசாங்க ஊழியர் அனைவரும் தமிழ்—சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளையும் தெரிந்திருக்க வேண்டும் என்று மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆனால் இன்று வெளியாகியிருக்கும் சுற்று நிருபங்களின் பிரகாரம் சிங்கள ஊழியர்கள் தமிழ் படிக்க வேண்டுமென்று எந்த இடத்திலும் கட்டுப்படுத்தவில்லை. ஆனல் தமிழ் ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென்பதே இச்சுற்று நிருபத்தின் சுருக்கம். இது வேண்டுமென்றே ஒருபகுதியினர் மீது சுமத்தப்படும் ஒரு பொறுப்பாகும்.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் சங்கங்கள் இரண்டும் இச்சுற்று நிருபங்களை கொட்டி வெளியிட்ட அறிக்கையில் இவற்றை நிரகரிப்பதற்கான காரணத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றன. இச் சுற்று நிருபங்கள் வேண்டுமென்றே ஒரு பகுதியினர் மீது மட்டும் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திக் கட்டுப்பாடு விதித்திருக்கின்றன என்பதுதான் அவர்களின் குற்றச் சாட்டு. இரு இனமக்களையும் ஒரே கண்ணோட்டத்தில், நோக்குவதாகக் கூறிக் கொள்ளும் தேசிய அரசாங்கம் தமிழ் ஊழியர்கள் மீதுமட்டும் சில கட்டுப்பாடுகளை விதிப்பது விரும்பத்தக்கதல்ல. இது ஒரு பகுதியினர் மீது இல்லாத சுமைகளை ஏற்றி அவர்கள் மீது வெறுப்புக் காட்டுவதாக அமைந்துள்ளது. எனவே தான் தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது பெரிய கட்சியாகவும், தமிழ் பேசுமக்களின்ஏகப் பிரதிநிதிகளாகவும்இருக்கும்தமிழரசுக்கட்சி இப் பிரச்சினையையிட்டுத் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதுடன் ஒரு பகுதி அரசாங்க ஊழியர் மீது சில பாரத்தை சுமத்தும் முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

இப் பிரச்சினைக்குப் பரிகாரம் எப்படி அமைய வேண்டுமென்பதை இங்கு நாம் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டத் தேவையில்லை. கடந்த இரண்டு வாரங்களாக இப் பிரச்சினையையிட்டே இப் பத்திகளில் கருத்து வெளியிட்டு இருக்கிறோம். ஆகவே நாம் சுட்டிக் காட்டியிருக்கும் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்து தமிழ் அரசாங்க ஊழியரின் கண்ணீரைத் துடைக்கும்படி தமிழரசுக் கட்சியின் பொதுச்சபையைக் கேட்டுக் கொள்கிறோம்.

### சிங்கள ஆசிரியர்

சிங்கள ஆசிரியர்களைத் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பும் பிரச்சினை துரும்பாகஇருந்து இன்றுதூணுகிக் கொண்டுவருகிறது. சுதந்திரக் கட்சி அரசாங்கமும், கூட்டரசாங்கமும் சிங்கள ஆசிரியர்களை வட — கீழ் மாகாணங்களுக்கு அனுப்புவதற்கான ஆரம்ப முயற்சிகளை முடித்திருந்தபோதிலும் கூட தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பைக் கண்டு தமது நிலையிலிருந்து பின்வாங்கி நின்றன. அடுத்த முயற்சிகளைப் பழைய அரசாங்கம் எடுப்பதற்கு முன்னர் பதவியிலிருந்துஅகற்றப்பட்டுவிட்டது. ஆனல் தேசிய அரசாங்கம் பதவியேற்றதும் இப் பிரச்சினைக்கு இடமில்லை என்று எல்லோரும் நம்பினார்கள். கல்வி அமைச்சர் அவ்வப்போது இப்பிரச்சினை பற்றி சிலாகித்திருந்தாலும் அது செயலுருப் பெற மாட்டாதுஎன்றேகருதப்பட்டது. இப்பொழுது நிலைமையில் ஒரு குறிப்பிடக்கூடிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது'

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் விரும்பினல் அத்தொகுதிக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவர் சம்பந்தப் பட்ட தொகுதியின் பிரதிநிதி என்பது உண்மையே. ஆனல் சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்படி கோரும் எந்தப் பாராளுமன்ற உறுப்பினராவது தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனையும் சேர்த்திருந்தாரா என்பது ஆராயப்பட வேண்டியதாகும். சிங்கள ஆசிரியர்களை எனது, தொகுதிப் பாடசாலைகளுக்கு அனுப்பும்படி பதவிக்கு வரும் அரசாங்கத்தைக் கேட்பேன் என்று பகிரங்கமாக மக்களிடம் கூறி வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் யாராவது இன்று வட— கீழ் மாகாணத்தில் இருக்கிறார்களா?

மக்களின் சம்மதத்தைப் பெருது ஒரு அதி முக்கியமான பிரச்சினையில் தனிநபர் முடிவு எடுப்பது ஆபத்தானதாகும். மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ இயக்கமாக விளங்கும் தமிழரசுக் கட்சி இதனையிட்டு தீர்க்கமாக ஆலோசனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. கீழ்மாகாணத்தில் சிலர் சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்படி கோருகிறார்கள். அங்ஙனம் சிங்கள ஆசிரியர்கள் பா. உறுப்பினர்களின் விருப்பத்தின் பேரில் அனுப்பப்பட்டால் கீழ்மாகாணத்தில் பெரும் பகுதிக்கு ஒரு பெரும் படையே அனுப்பப்படும். இதனல் நிலைமை ஆபத்தாகலாம். சுதந்திரக் கட்சியும், கூட்டரசாங்கமும் செய்ய முடியாததைத் தேசிய அரசாங்கம் செய்ய முன்வரலாமா என்று என்று தமிழ் பேசும் மக்கள் கேட்கிறார்கள். இப் பிரச்சினையையிட்டும் தமிழரசுப் பொதுச் சபை விரிவாக ஆராயக் கடமைப்பட்டிருக்கிறது;

### சத்தியாக்கிரகம்

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் சத்யாக்கிரகமுயற்சி பற்றியும் ஆராய வேண்டியது தமிழரசுப் பொதுச் சபையின் தவிர்க்க முடியாத கடமை. அவர்களின் கோரிக்கை நியாயமானது. ஆனல் இச் சந்தர்ப்பத்தில் சத்தியாக்கிரகம் ஒன்று அவசியம் தானு என்பது கேள்விக்குரியது.

ஒதுக்கப் பட்டோரின் உரிமைக்கு சத்தியாக்கிரகப்போராட்டம் உரிய ஆயுதம். அதனை நாம் மறுக்கவில்லை, ஆனல், அதற்கு இத்தனை அவசியம் இப்பொழுது இல்லை. பொது இடங்களில் தீண்டாமை பாராட்டப்படுவதைத் தடுக்க தமிழரசுக் கட்சி சில ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஏற்கனவே அமரர் வன்னியசிங்கம், திருமலை தந்தமாமலை இராசவரோதையம் ஆகிய இருவரதும் முயற்சியால் பகிரங்க இடங்களில் தீண்டாமை பாராட்டப்படுவதைத்தடை செய்ய சில சட்டங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இச் சட்டங்களை முழு அளவில் அமுல் நடாத்தும்படி அரசாங்கத்தைக் கேட்பதற்கு முயற்சிக்கலாம்.

### போதனுமொழி

போதனுமொழிப்பிரச்சினை பற்றி தமிழரசுத் தலைவர்கள் ஏற்கனவே தீர்க்கமான கருத்தை வெளியிட்டு வருகிறார்கள்; கடந்த வாரம் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடை பெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய, தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் தாய் மொழியே போதனுமொழியாக இருக்க வேண்டும் என்று அடித்துக் கூறியதுடன், பாரதியின் பாடலிருந்து மேற் கோள் காட்டி கண்ணைவிற்று சித்திரம்

(9-ம் பக்கம் பார்க்க)

# "வன்னியசிங்கம் வழியில் வாழுங்கள்"

## கொல்லங்கலட்டிக் கூட்டத்தில் முத்தமிழ்க் காவலர் முழக்கம்

"நான் இலங்கையில் இரண்டு திங்கள் தங்கியிருக்கமுடியுமானல் இலங்கைத் தமிழரசுக்கட்சியினரின்உதவியுடன் தீண்டாமையை ஒழிக்கமுடியும்" என்று திருச்சிஅறிஞர் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கொல்லங்கலட்டியில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவுதின விழாவில் சிறப்புரை நிகழ்த்துகையில் கூறுஞர், மேலும் அவர் பேசுகையில் 'எதிர்காலத்தில் தமிழ்மக்கள்தமது வருங்காலச் செல்வங்களான குழந்தைகளுக்கு வன்னியசிங்கத்தின் பெயரைச் சூட்டியும் அவரின் சிறந்த கருத்துக்கள்,கொள்கைகள்,தொண்டுகள் பற்றிய நாட்டுப்பாடல் இசைத்துப் பாடியும் இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும், என்றும் கூறினர்.

உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் தலைமையில் அமரர் நினைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொள்வதற்கு என்றே முத்தமிழ்க்காவலர் ஈழம் வந்திருந்தார்.

முத்தமிழ்க்காவலர்நிகழ்த்திய உரையின் சுருக்கம் வருமாறு:-

'வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்ட தமிழக அரசியல் தலைவர்கள் மிகக் குறைவு. ஆனல், இலங்கையில் அதுவும் தமிழரசுக் கட்சியில் உள்ள தலைவர்களில் மிகப் பெரும்பான்மையினர் சட்டவாதிகளாகவே இருக்கிறார்கள். இதில் தமிழகம் ஈழத்தைப் பின்பற்ற வேண்டும். நான் நாடு திரும்பியதும் இது பற்றி அங்கு எடுத்துக் கூறுவேன்.

"இலங்கையில் தமிழ் பேசுபவர் மத்தியில் எதிர்க்கட்சிகள் இருப்பது குறித்து வேதனை அடைகிறேன். இன, மொழி,உரிமைகளுக்குப் போராடும் தமிழர் மத்தியில் பிரிவினை இருப்பது நல்லதல்ல. தமிழரசு காணும் நோக்கம் கொண்டுள்ள ஈழத் தமிழர் மத்தியில் தியாக உணர்ச்சி காணப்படும் நேரத்திலுமா பிளவுகள்மலிந்துள்ளன? தமிழர்களைப்பிரித்துவைத்து இலபம் காண முயற்சிப்பது எதிரிகளுக்கு உடந்தையாக இருப்பதற்குச் சமமாகும். ஆகவே இலங்கைத் தமிழர்கள் ஒரே குரலில் ஒரே தலைமையில் இயங்க வேண்டும். இணைப்பு ஆட்சி காணப் போராடும் தமிழர்கள் முதலில் இணைந்து ஒற்றுமையாக வேண்டும். எல்லோரும் தமிழ்நிலத்தைக்காக்க தமது பங்கினைச் செலுத்தி மொழி, இனம், பிரதேசம் அழியாது காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.'

மேலும்அவர் பேசுகையில்:
"தமிழ் நாட்டில் தீண்டாமை அகற்றப்பட்டு விட்டது. ஆனல், சேய் நாடாகிய இலங்கையில் தமிழ்ப்பிரதேசத்தில் தீண்டாமை இன்னும் இருப்பது வேதனைக்குரியது. தீண்டாமை என்ற வார்த்தையிலேயே தீமை என்னும் பொருள் தொக்கி நிற்கிறது. தீண்டாமை 'தீ, மின்சாரம்' இவற்றிலிருந்து நீக்கப்படக் கூடாது தான். ஆனல், சமூகத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டும். தமிழ்ப்பகுதியில் தொடர்ந்தும் தீண்டாமை பாராட்டப்பட்டு வருமேயானல், அயல் தேசத்தவரும் உங்கள் நாட்டை தீண்டுவது தீமையென்றேஎண்ணி எந்த விதத் தொடர்புகளையும் கொள்ள மறுப்பர்.

"திருமணம்,இல்லம்,உணவு ஆகிய தனிப்பட்ட உரிமைகளில் விட்டுக்கொடுக்க மறுத்தாலும் கோயில் வழிபாடு போன்ற விடயங்களில் தீண்டாமைபாராட்டுவதுதகாது. ஆண்டவனை வணங்குவதி



லும் வேற்றுமை வேண்டுமா? இந்து சமயத்தில் இத்தகைய வேறுபாடுகள் தொடர்ந்து பாராட்டி வந்தால் சமய வளர்ச்சிக்குத் தடையேற்படும். ஏனைய மதங்கள் முன்னேற்றமடைய வாய்ப்பேற்படும்.

'சைவசமயத்தில் நந்தனரை நாமெல்லாம் ஏற்ற பின்பும்கூட தீண்டாமைப் பேய் ஒழிய வேண்டாமா? நான் இங்கு இரண்டு திங்கள் தங்க முடியுமானல் தமிழரசாரின் உதவியுடன் தீண்டாமைப் பேயை விரட்டியடிப்பேன். பகைவர்கள் நீதிசெய்யவில்லை என்று கூறும் தமிழர்கள் தமக்குள்ளே பாகுபாடு காட்டுவது அநீதியாகும்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'தமிழறிஞர் திரு. வி. க. வும் அமரர் வன்னியசிங்கமும் செப்டம்பர் 17ம் நாள் வியாழக்கிழமை மாதம், நாள் போன்றவற்றில் ஒன்ருக மறைந்துள்ளனர். இது போன்ற ஒற்றுமை இணைப்பைவிட தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் வேறு புதிய தொடர்பும் வேண்டுமா?

'இலங்கைத்தமிழர் வேறு, தமிழ் நாட்டுத் தமிழர் வேறு என எமக்கு மத்தியில் பிரிவினை தோன்றவிடாது நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயலில்இறங்கவேண்டும். அமரர் வன்னியசிங்கத்தை இரண்டு தடவைகள் மட்டுமே சந்திக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அச்சந்திப்புகளின் போது அவர் தமிழிலும் புலமைகொண்டவர் என்பதையும் மொழிக்காகவும், இனத்துக்காகவும்,நாட்டிற்காகவும் இறுதிவரை போராடும் உறுதி பூண்டவர் என்பதை அறிந்து கொண்டேன். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் அரசியல் ரீதியில் வெவ்வேறு எல்லைக்கோடுகள் இருந்தாலும் இருநாட்டுத்தமிழர்களுக்குமிடையே ஒரே பண்புதான் உண்டு.

'அமரர் வன்னியசிங்கம் ஒரு அறிஞர், கடின உழைப்பாளி, உயர்ந்த பேச்சாளர், இனத்தொண்டுக்கு தன்னையே அர்ப்பணித்த பெரிய தியாகியுமாவர். மருத்துவர் ஆலோசனைப்படி நீண்ட ஓய்வும் தமது தொழிலில் அதிக அக்கறையும் செலுத்தியிருந்தால் அவர் இன்னும் பலகாலம் வாழ்ந்திருப்பார். தமது உடல், பொருள் ஆவி மூன்றையும் தமிழ்மக்களுக்காகத் தியாகம் செய்தார். எனவே வருங்காலத்தில் தமிழ் மக்கள் தமது குழந்தைகளுக்கு வன்னியசிங்கத்தின் பெயரைச் சூட்டியும், அவரின் உயர்ந்த கருத்துக்கள், கொள்கைகள், தொண்டுகள் பற்றி நாட்டுப் பாடல்இசைத்துப்பாடியும் வாலிபர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.'

திரு. மு. திருச்செல்வம் அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

'எம்மிடையே வாழ்ந்த மாபெரும் தலைவர் அமரர் வன்னியசிங்கம். அவரின் தியாகத்தில் ஒரு சிறு அளவைத்தானும் நம்மால் செய்ய முடியுமா? இனமும், நாடும் வளர்ச்சியடைவதற்கு அரசியல் தலைவர்கள் தியாகிகளாக இருக்கவேண்டும் என்பதற்கு அன்னாரின் வாழ்வு ஒரு நல்ல எடுத்துக் காட்டு.' திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை, புதுமைலோலன் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்

## மொழி இலாகா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி அமுல் பொறுப்பைத் திறைசேரி ஏற்றுக்கொண்ட பின்னர், அது 'தமிழ்பகுதி', 'சிங்களப்பகுதி' என இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு திறைசேரியின்கீழ் செயல்படும். அப்பகுதிகள் ஒவ்வொன்றும்வெவ்வேறு நிர்வாக அதிகாரிகளின் கீழ் செயல்படுமென்று தெரிகிறது.

தமிழ்மொழி விசேட விதிகள் சட்டமான பின்னர், அதனை அமுல் நடத்துவதற்காக தனிப்பிரிவு ஒன்று நிறுவும்படி தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை வற்புறுத்தி வந்துள்ளது. இக் கோரிக்கை இப்பொழுது நிறைவேற்றப்படவிருக்கிறது. தனிப்பிரிவு அமைக்கப்படுவதின்மூலம் தமிழ்மொழி விசேட விதிகள் சரியாக அமுல் நடத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம் முடிவு அமுல் நடாத்தப்படும்பொழுது அரசகருமமொழித் திணைக்கள ஆணையாளர்கலாநிதி நந்ததேவ விஜயசேகராவின் அதிகாரங்கள் அனைத்தும் திறைசேரிச் செயலாளர் திரு. ஜினதாச சமரக்கொடியிடம் ஒப்படைக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழிலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக துறைமுக ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் கோரிக்கைக்கு தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஆகிய இருவரும் பல வழிகளில் உதவியிருக்கிருர்கள்என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கதாகும்.

இத்திங்கள் 14ம் திகதியன்று கழகச்செயலாளரும், தலைவரும் துறைமுக ஆணையாளரைநேரில்கண்டுதொழிலாளர் சம்பந்தப்பட்ட ஐந்து பிரச்சினைகளையிட்டு பேச்சுவார்த்தை நடாத்தினர்கள் என்றும், அக்கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கழகச் செயலாளர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் துறைமுக நாவாய் இயக்குனரின் விதவைகள், அனதைகள் ஓய்வுப்படிபெறுவதற்கான அடையாள அட்டைகளைத் தமிழில் வழங்கும்படி கழகம்கேட்டுக்கொண்ட கோரிக்கையையும் திறைசேரி ஏற்றுக்கொண்டுள்ளது.

## பிரச்சினைகளுக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகிக தாங்கள் தயாராக இல்லை என்றும் கூறினர். இக்கருத்தைமேடைதோறும் கூறுவதுடன் மட்டும் நின்றுவிடாது தீர்மானமாக நிறைவேற்றி அரசாங்கத்தின் பார்வைக்குச் சமர்ப்பிப்பதும் தமிழரசாரின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

## ஏயர் சிலோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் பிரயாணம் செய்வதையேவிரும்பினர்கள்.விமானப் பிரயாணம் அதிகரிக்கத் தொடங்கியதும், விமானத்தில் இடம் பிடிப்பது பெரிய பிரச்சினையாக மாறியது. இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி ஏயர்சிலோன் நிறுவன ஊழியர்கள் வெளியில் உள்ள சிலரின் உதவியுடன் பணம் சம்பாதிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறர்கள் என்று தெரிகிறது.

இந்தியாவுக்குச் செல்ல கனவிலும் எண்ணிப்பார்க்காதவர்களின் பெயரில் எல்லாம் விமானத்தில் இடம் ஒதுக்கப்படுவதாகவும், பின்னர் அவசரமாக இந்தியா செல்ல துடிப்பவர்களிடம் குறிப்பிட்ட ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு அந்த இடத்தை அளிப்பதாகவும் அறியப்படுகிறது. இது வியாபாரமாக நடப்பதாகவும் இதற்கு ஏயர்சிலோன் ஊழியர்கள் பலர் தங்களின் முழுச்செல்வாக்கையும்பயன்படுத்தி உதவுவதாகவும் கூறப்படுகிறது.

இப்பொழுது மீண்டும் கப்பல்சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதால் விமானத்தில் இடம்பிடிப்பதற்கு அதிக தொகை கொடுக்கவேண்டி ஏற்படலாம் என்றுகூறப்படுகிறது.

இப் பிரச்சினைகளையிட்டு தமிழரசுப் பொதுச் சபை விரிவாக ஆராயக் கடமைப்பட்டிருப்பதுடன், முடிவான கருத்தையும் எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறது என்பதை நாம் இங்கு வலியுறுத்த விரும்புகிறேம்.


★ மாணவ ஆசிரியர்
★ சிறுப்பர் சேவை
★ பொதுச் சௌக்கியம் பயில்வோர்
★ தட்டெழுத்தாளர்

**தெரிவுப் பரீட்சை — 1966**

மேற்படி பரீட்சைக்கென்றே தயாரிக்கப் பட்டுள்ள பயிற்சி கோவைகள்

★ தமிழ் பாஷை — ரூ 5/-
★ பொது அறிவு — ரூ 5/-
★ பொது விவேகம் — ரூ 5/-

உடனே பணத்தை போஸ்டல் ஓடர் செய்யுங்கள்

**சர்வகலாசாலை போதன கழகம்**

540, மருதானை வீதி, த. பெ. இல: 1079
கொழும்பு-10
தொலைபேசி: 91699



ஈழத்தில் தன்னிகரற்று விளங்கும்

**"எவர் பிறைற்"**

(EVER BRIGHT)

● எவர் சில்வர் பாத்திரங்களுக்கும்
● அன்பளிப்பு பொருட்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

**சிவஞானம் பிறதர்ஸ்**

71, குமார வீதி, — கொழும்பு-11

சுதந்திரன் வாசக நேயர்களுக்கு 5 வீத கழிவு கொடுக்கப்படும்.

## இரு உருவக் கதை

# கணிப்பு

அரேபிய பாலைவனமல்ல அப்பிரதேசம். அது; காலமெல்லாம் வழங்கொழிக்கும் ஜீவ பூமி!

அப்புண்ணிய பூமியின் மாரிமழையைக் கணித்து உலகெங்கும் உணர்த்தும் தூய பணிக்கு இருவர் போட்டியிட்டுக் கொண்டு முன்வந்தனர்.

ஒருவர்; வாய் ஒடுங்கிக் குறுகி உடல் நீண்டு அகன்று வட்ட வடிவமாகி அடிபெருத்த கண்ணாடிப் பாத்திரம் ஒன்றையும், மற்றவர்; வாய் விரிந்து அகன்று வட்டவடிவமாகி உடல் நீண்டு சிறுத்து அடி மிகவும் குறுகிய கண்ணாடிப் பாத்திரம் ஒன்றையும் எடுத்துக் கொண்டு வந்தனர். மழை தட்டுத் தடங்கலின்றிக் கொட்டும் வெட்ட வெளியில்; இரு பாத்திரங்களிலும் நீர் புகத் தக்கதாய் ஸ்திரமான இடத்தில் நிமிர்த்தி வைத்து விட்டுக் கூர்ந்து அவதானித்த வண்ணம் இருந்தனர்.

மழை ஓய்ந்ததும் அவரவர் பாத்திரத்துட் கிடந்த அமுத ஊற்றைத் தத்தமது அளவு கோலால் அளந்து வெளியிட்டனர்!

இருவரின் கணிப்பும் மலையும் மடுவுமாய் காணப்பட்டன. ஆயினும்; தங்கள் மதிப்பீடே சரியான தென்ற அசட்டு நம்பிக்கை ஈன்ற இறுமாப்பில் காலவிரயஞ் செய்து, பாரதூரமாக மோதிச் சண்டை போட்டு நிலை குலைந்து மாண்டனர்.

இன்னும் அம்மாநிலத்தின் மழை வீழ்ச்சியை கணிக்க யாரும் முன்வரவில்லை!

சடாட்சரன்

# மெய்மை

நடுப்பகல்!

நாலா பக்கமும் பரந்து விரிந்தெறிக்கும் மஞ்சள் நிறவெய்யில் தன்னுள் அடங்கிக் கிடக்கும் சுவாலை கிளப்பிக் காந்ய்து கொண்டிந்தது. நீண்டு, விரிந்து காணப்படும் தார் வீதி. வெயிலின், சுவாலைகள் பட்டு பொங்கிப் பொருமிக் காட்சியளித்தது; இறுமாப்பில், மார்ப்பை உயர்த்திப் பெருமிதத்தேடுநிறமிர்கிறது.

அதன்மேல், எத்தனையோ மைல்களுக்கப்பால் மலர்ந்த முகங்காட்டி அரைந்து, செல்லும் முகிற்கூட்டம் தெரிகிறது. அதைக் கண்டு தார் வீதி கர்சிக்கிறது. 'என்னைக் கொஞ்சமேனும் மதியாது, அந்த அற்பன் ஏதோ உலகமக்களுக்கே தன்னுடலை அர்ப்பணித்த, இறுமாப்பில் செல்கிறனே...?'

முகிற்கூட்டம், இன்னமும் நகர்ந்து கொண்டு தான் இருந்தது. அதைக் கண்ட தார்வீதிக்கு, பெறுமையைச் சோதிப்பது போலிருந்த முகிற்கூட்டத்தின் செய்கை!

'அற்பனே...நில்லடா...' முதலம்பு பாச்சியது தார் வீதி, தார்வீதியின், வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் அம்புகளாற் பாச்சிப் பெறும் வேதனையைவிட மேலான, பிரசவ வேதனையாகவிருந்தது முகிலுக்கு. முகிலின், தோற்றத்தில் மாற்றம் தென்படவில்லை] மௌனமாகத் தன் பயணத்தைத் தொடர்கிறது.

'என்ன ... நானுரக்கக் கூவியும், கேட்காதவனைப் போற் செல்கிறனே...' தார்வீதி முணுமுணுக்கிறது. 'அடே, அற்பனே நில்லடா...' சிறுநேர இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் தார் வீதியின் சர்ஜனை. மெல்லனச் சென்று கொண்டிருந்த முகிற் கூட்டம், சிறிதும் நகராது தடைப்படுகிறது.

,உனக்கெவ்வளவு முளை நெஞ்சடா, ஆணவத்தோடு நீ என்மேற் செல்ல...?'

—'தரையோடு, தரையாகச் செல்லும் பழக்கம் எனக்கில்லை, வாயுதேவனின், அணைப்பில் ஒய்யாரமாக வர்ணஜாலங்காட்டிச் செல்வதே ...எனது இயற்கை விதி...' — 'இயற்கையாம்! இயற்கை! முட்டாள் நீ அப்படிச் சொல்லச் தகுதியுடையவனுக என்னத்தைச் செய்து விட்டாய்...? தார் வீதி வினவுகிறது.

—'வாடி, நிலை தளரும் பயிர்களை வளமுற்றுத் துளிர்வதற்கு; உழவர் பெருமக்கள், வானை நோக்கி அழைத்த போதெல்லாம் என் மேனியைச் கரைத்து மழையாய்ச பொழிகிறேன்...'

—,நிறுத்து! நிறுத்து! பயிர்களை வளமுற்று வளரச் செய்வதும், வரண்டநிலத்தைச் 'சிதம்பச்' செய்வதும் பணியென்கிறுய்...நான், தவருது மானிடரை நீண்ட வெண் மார்பிலேந்தி நேர்வழியே ஏகவைக்கும் என் பணி, என்னவென்று நீ வியப்பாய்?

முகிற்கூட்டம், பதில் பேசவில்லை; மௌனியாக நிற்கிறது. தார் வீதி விடாது ;தொடர்கிறது.

'உன்பணி உயர்வென உழறுகிறுய்... ]மாரியெனப் பொழிந்து மானிடர்க்குக் கொடூர ;கொடுமைகளை விளைத்து மமதை கொள்வதா உனது பணி... சேவை யெல்லாம்...?'

தார் வீதி ஒய்கிறது.

மௌனியாகி, நின்ற முகிற் கூட்டத்தின் மலர்ந்த முகம் நளிர்ந்தது; மலர்ச்சி தளர்ந்தது; முகம் கறுத்து 'டும்... டும்... டம்...டும்,' கொடூரம் கொண்டு முழங்கிற்று, 'சோ'வென்று மழை கொட்டியது. வெள்ளம், தார்வீதியின் மீது அடித்துப் புரண்டோடியது. எங்கும், இருள், மயம், ஒளி மீண்டும் பரவியது. அங்கிருந்த தார்வீதியையும், வானிற் சென்ற முகிற்கூட்டத்தையும் காணவில்லை!

'பட்டனந்து'

# கண்ணோட்டம்

"வணக்கம் ஐயா!"

'வணக்கம் வணக்கம்! வருக வருக! அமருக... சுவைநீர் பருகலாமே!'

'சரி பருகலாம்!' பேறு நண்பருள்ளொருவராகத் தோன்றி அதிதியாக வருகை புரிந்து என்வரவேற்பை ஒப்புக் கொண்டு ஆசனத்திலமர்ந்து காப்பியைச் சுவைத்துக் கொண்டிருந்த அந்த நண்பரின் எக்ஸ்-றே கண்கள், சற்றுத் தூரத்திலே தூக்கப்பட்டிருந்த கிளிக்கூண்டைவட்டமிட்டு மேய்ந்தன.

'நீங்கள் ஒரு பகுத்தறிவாளன்... சிறந்த இரசிகன்... நிறைந்த அனுபவஸ்தன்... விஷயம் விளங்கிய மனிதன்... அப்படியிருந்தும் பிற்போக்குத்தனமான இந்தச்செயலை...'

நான் கிளி வளர்ப்பதைப்பற்றி... எனது வீட்டிலே தூங்கிய கிளிக் கூண்டுக்குள் கிளி இருந்ததைப் பற்றி... நண்பர் சுடச்சுடச் சுட்டிக் காட்டினார் 'குறையைச் சுட்டிக்காட்டுவேன் தான்' நண்பன். நான் பதிலெதுவும் கொடுக்கவில்லை... அவரே உரையாடலைத் தொடரலாயினர்.

'பாருங்கள் மிஸ்டர்! அந்தக்கிளி ஆடாமல் அசையாமல் எத்தனை வேதனையைத் தேக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது... கானகத்திலே சர்வசுதந்திரமாய்ப் பறந்து கொண்டு, விரும்பிய காய் கனி வர்க்கங்களைச் சுவைபார்த்துக் கொண்டு, தனதினத்தவர்களுடன் கொஞ்சிக்குலாவி மகிழ்ந்த வண்ணம் வாழவேண்டியவொரு சுதந்திர ஜீவனைப்பிடித்து அதன் உரிமைகளையெல்லாம் பறிமுதல் பண்ணி மீளாத சிறையிலடைத்து, அது போதாதென்று உங்கள் மொழியையும் பலாத்காரமாக அதன் தொண்டைக்குள் திணித்து...அதன் துன்பத்திலே இன்பங்காணுகிறீர்களே... இதுவுமொரு இரசிகத்தன்மையா?'

—நண்பர் வெட்டொன்று துண்டுகள் இரண்டென்கிற ரீதியில் நறுக்காக - ஆனல் வேடிக்கையாகத்தான் பேசினார்.

அப்பொழுதும் நான் பதில் பேசவில்லை... அவரே விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

'அன்றொரு நாள் இப்படித்தான் எழுத்தாள நண்பர் 'ஈழத்துக்குண்டுமணி' யவர்களின் இல்லத்திற்கும் சென்றேன். அவருமொரு அழகான கிளிவளர்க்கிறார். அதிலே வேடிக்கையென்னவென்றால் - 'நான் சிறையிலிருக்கவில்லை. நான் சொர்க்கத்திற்தானிருக்கிறேன்... என் வாழ்வு புதுமையான புரட்சிகரமான வாழ்வு. நான் விரும்பித்தான் இந்த வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்டேன்...' இவ்வாறுகஅந்தக் கிளி பேசிற்று... அது போகட்டும், என்ன இருந்தாலும் உங்களுடைய தரத்திற்கு இது ஏற்ற செயலல்லவென்கிற கசப்பான உண்மையை நீங்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்...'

— இவ்வாறுக இன்னும் எவ்வளவோ பேசிப் பேசி கிளிப்பிரச்சினையை நண்பர் ஒருவாறு முடித்து விட்டார்;

அவருடைய சொற்பொழிவைத் தோற்கடிக்கும் உரையாடலில் அடிக்கடி முற்போக்கு - பிற்போக்கென்கிற வசனங்கள் மட்டும் விளையாடத் தவறவில்லை.

எஸ். எல். சவுந்தரநாயகம்

பேச்சின் மூலம் அவர் தன்னையொரு வடிகட்டின முற்போக்காளனாக வேஷப்படுத்தினார்.

அவர் உண்மையாகவே முற்போக்கு அணியைச் சேர்ந்த ஒருவர்தானா... அல்லது முற்போக்குப் போர்வையிலிருக்கும் திரிபுவாதியா... அல்லது என்னையே விலைக்கு வாங்க வந்த அந்நிய அடிவருடியானவொரு ஒற்றனா... அல்லது பணத்திற்காகக் கொள்கையைக் கோட்டைவிடும் சந்தர்ப்பவாதியாவென்பதைச் சரியாக நிதானிக்க முடியவில்லை; ஏனெனில், நான்கு மாச காலத்துள் பேனு நட்பாக ஆரம்பித்த எங்களுடைய முதற் சந்திப்பு அதுதான்.

நானும் முற்போக்குக் கொள்கைகளை முழுக்கவரவேற்பவன்தான். ஆனல் முற்போக்கு என்கிற பதத்திற்கு நான் கண்ட அர்த்தம் வேறு; அந்தப் பேனு நண்பர் காட்டிய அர்த்தம் வேறு.

அவர் தன்னையொரு எழுத்தாளனென்று சுட்டிக்காட்டவும் மறக்கவில்லை.

'நீங்கள் எந்த எந்தப்பத்திரிகைகளில் என்னென்ன சிறுகதைகள் கட்டுரைகள் எவ்வெப்பொழுது எழுதினீர்கள்?' என்று நான் கேட்டு அவரின் மகிழ்ச்சிக்குச் சாவுமணியடிக்க விரும்பவில்லை. ஏனெனில்-

ஒரே ஒரு சிறுகதை. ஒரு கட்டுரை ஏன் ஒரு 'துணுக்கு'க் கூட எழுதாமல் எழுதுலக மேதைகளாய்ப் பவனிவரும் 'எழுதாத எழுத்தாளர்வரிசை' யிற் சேர்ந்தவராய் அவரும் இருந்து விட்டால் அவரின் வயிற்றெரிச்சலில் ஏன் பெட்ரோலை ஊற்ற வேண்டும்? எனவே அவ்வாய்ச்சியை விட்டுவிட்டேன்.

'அன்பு நண்பரே! தாங்கள் ஒரு முற்போக்காளர், அதுவுமொரு எழுத்தாளர் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பெருமையடைகிறேன்... நான்சொல்லப் போவதையிட்டுக் குறைவிளங்கக் கூடாது. நான் சொல்லப்போவதில் ஏதாகிலும் தவறு கண்டாலும் மனப்பூர்வமாக மன்னித்துக் கொள்ளவேண்டும்... ஏனெனில் நமது நட்பு நீடிக்க வேண்டும். நாம் நண்பர்களாகவே இருக்க வேண்டும்.

'கிளிக் கூட்டையும் கிளியையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சிந்தனையாளர்கள் பார்த்த அதே கண்ணோட்டத்திற் தானே இன்றும் நீங்கள் பார்க்கிறீர்கள்... இது தானு முற்போக்கு? நீங்களொரு உண்மையான முற்போக்காளனுயிருந்தால் எனது கிளிக் கூண்டையும் கிளியையும் புதிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்... சிந்திக்க வேண்டும்... பிரச்சினை தீர்க்கும் மார்க்கத்தைக் காட்ட வேண்டும்... அது தான் புதுமை... அதுதான் புரட்சி... அது தான் முற்போக்கு...'

— இவ்வாறு சொல்லாமற் சொல்லியுங் காட்டினேன். அப்பொழுதுங்கூட நண்பர் கிளிக்கூண்டினண்டையிற் செல்லவேயில்லை.

'என்ன புதுக்கண்ணோட்டம் வேண்டிக்கிடக்கிறது மிஸ்டர்? இந்தப் படுபிற்போக்குத்தனமான காட்சியைப் புதிய கண்ணோட்டத்தில் வேறு பார்க்க வேண்டுமா?'

— நண்பர் வேடிக்கையாகத்தான் அப்பொழுதும் கூறினார்... புறப்படவும் ஆயத்தமானார். என்னை வெற்றி கொண்ட பெருமிதம் அவர் பார்வையில் பளிச்சிட்டது. தலையை நிமிர்த்தியவராகக் காலைத் தூக்கிக்கொண்டு 'சரி வரலாமே' என்று விடைகோரினார். நானும் எழுந்து —

'சரி போய் வரலாம்... மன்னிக்கவும்! ஒரேயொரு நிமிடம்...' என்று, அவரைத் தடைப்படுத்திய நான் கிளிக்கூட்டைத் திறந்து கிளியைப் பிடித்து வெளியிலெடுத்து அவர் காலடியில் வீசினேன். அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக...

அப்பொழுதுங்கூட கிளி எவ்வித சலனமுமின்றிப் போட்ட இடத்திற்தான் கிடந்தது.

கிளியைத் தொட்டுப் பார்த்த நண்பர் கல்லாய்ச் சமைந்து விட்டார்.

ஏன்?— அந்தக்கிளி பிரம்மாவினுல் படைக்கப்பட்ட உயிர்க்கிளியல்ல... இயற்கைக்கிளியல்ல ...; அஃதொரு கைதேர்ந்த கலைஞனுல் உருவாக்கப்பட்ட செயற்கைக்கிளி... பொம்மைக்கிளி.

# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

வி. கந்தவனம். பி. ஏ.

பல்லிசொன் னலதைக் கேட்பர்—யாரும்
படித்தவர் சொல்லினைக் கேட்பதற் கில்லை!
சொல்லிவிட் டாலட போச்சு—பொங்கித்
துள்ளி எழுந்திவன் யாரெனக் கென்பார்!
தொல்லையுன் வேலையுண் டாக்கும்—அதனால்
தொடங்குவதேன் அதை விட்டிடு மென்றால்
இல்லையிக் காரியஞ் செய்வேன்—என்ன
இடர்கள்வந் தாலுமுன் னேறுவ னென்றே—

பல்லைக் கடித்தெழு வார்கள்—ஆங்கே
பாய்ந்தொரு பூனை குறுக்கிடின் ஏதோ
வில்லங்கந் தானெனக் கண்டே—கொண்ட
வேலையை விட்டுடன் மீளுவர் விடு!
கல்லுமண் தோன்றிட முன்னே—உலகம்
கண்டு வளர்ந்த தமிழ்க்குடி மக்கள்
கல்லிலே நாருரிக் கின்றா்—மண்ணைக்
கையினால் வாரியே வீசுரா் கண்ணில்!

மெத்தநம் பண்புகள் மாற—எங்கள்
மேன்மைகள் அறம்புற மாகவே பாற
தத்தித் திரிந்துயிர் நண்பர்—கண்ணைப்
பொத்தி வெழுத்துத்தங் காரியம் பார்ப்பார்!
வித்தைகள் ஆயிரங் கற்றோர்—இனத்தை
விற்றிடுந் தன்நலப் பண்பினைப் பெற்றோர்!
இத்தகைப் பேர்வழி நாங்கள்—எங்கே
எண்ணியும் நெஞ்சினிற் நைவைத்துச் சொல்லும்—

தமிழெங்கள் உயிருக்கு நேரா—மெத்தச்
சரியென்றே இதை நீங்கள் ஒப்புக்கொள் வீரா?
அமிழ்கின்ற ஆசைக்குள் ளாகி—அதனால்
அளவில்லாத் துயர்த்தீயில் ஆற்றாது வேகி
குமிழாகும் இன்பத்தில் அயரும்—மானத்
தமிழ் மக்கள் பொருட்டாக மதிக்காத உயிரைத்
தமிழுக்கு நேராக்கு வீரா—இந்தத்
தவறான கூற்றுக்குத் தலைப் பென்று பேரா?

உரிமைக்குப் போராட்ட மென்றால்...மான
உணர்வோடு வெற்றிக்கு திரண்டிங்கு நன்றாய்
ஒருமித்து நில்லாத தமிழர்—தமிழின்
உயர்வுக்கு உயிர் ஈயத் துணியாத தமிழர்
ஒருபத்து ரூபாயை நம்பிக்கொண்ட உயர்வான
கொள்கையை விடுவார்வி ரும்பி
அருமந்த புகழ்பட்டுத் திர—வழியை
ஆக்குவார் இவருக்குத் தமிழன்னை நேரா?

மலையாகச் சுரந்தென்றும் ஊறிச்—செல்வம்
வழங்கியே பொலிகின்ற வளமான ஆறாய்க்
கலையான கடலாக வாளும்த்—தேவர்
களிக்கின்ற அமிழ்தாக அருள் மாரித் தேனும்
நிலையான நிகரற்ற மொழியைப்—போற்றி
நெஞ்சிலே கொள்ளார்க்கு நேரான வழியில்
குலையாத குறிக்கோளொன் றில்லார்—உயிர்க்குத்
தலையான சான்றோர்கள் நேரென்று சொல்லார்!

தமிழெங்கள் உயிருக்கும் மேல்மேல்—இன்பத்
தமிழெம்மை உருவாக்கி உய்விக்கும் வேல்வேல்!
தமிழ்தன்னிற் பற்றென்று சொன்னால்—முதலிற்
தமிழ்ப்பண்பைப் பின்பற்றிக் காட்டுமென் முன்னால்!
தமிழ்ப் பற்றே யில்லாத பேரின்—உயிர்க்கு
தமிழன்னை நேரென்று கவிகள்சொல் வாரோ?
தமிழெங்கள் கண்கண்ட தெய்வம்—நாளும்
தமிழ்தன்னை மனம் வைத்து வணங்கினால் உய்வோம்!

— வேறு —

வண்டமிழை வாலிபர்கள் வளர்க்க வேண்டும்
வான்புகழும் மானிலத்தில் வலுக்க வேண்டும்
தண்டமிழின் பண்புகளைத் தக்க சான்றோர்
தாரணியில் பரப்ப மொழி தழைக்க வேண்டும்.
பண்டை நிலைப் பெருமைகளைப் பற்றி இங்கே
பறையடித்து வாழ்வதிலோர் பயனுமில்லை
கொண்டகுறிக் கோளுடைய ஓர்குடைக் கீழ்க்
கூடிவிடும் வெற்றிவருங் கூறித் தானும்!

## வாழ்க தமிழ்!

குமிழ்நகைக் கூத்தன் நோக்கில்
குமரனின் வேலின் போக்கில்
அமிழ்தினில் வாணி நாவில்
ஆன்றவர் நூலில் நின்று
கமழ்மணம் வீசி என்றும்
களித்திடுங் கன்னி நங்கை
தமிழ்புகழ் தரணி யெல்லாம்
தழைத் தெழுந் தாள்க வாழ்க!

வானுதற் கண்ணன் மாசில்
மாதவந் தெற்கி லோங்க
மாணெழில் மொழியை ஈய
மாமுனி பெயரைச் சூட்ட
பேணிடச் சங்கச் சான்றோர்
பெரும்புனல் நெருப்பு வென்று
காணரும் வளங்கள் ஊறும்
கலைத்தமிழ் அன்னை வாழ்க!

(முற்றும்)

# கண்ணீர் சிந்தும் சுவர்

வல்லரசுகளின் கெடுபிடியால் ஜெர்மனி இரண்டுபட்டு நிற்கிறது. ஜெர்மனியின் எழிலான தலைநகரம் பேர்லின் நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. இடையே மலைபோற் சுவர் எழுந்து நிற்கிறது. இச் சுவர் தனது நாலு ஆண்டு காலத்தைப் பூர்த்தி செய்து, ஐந்தாவது ஆண்டிற்கு அடி எடுத்து வைத்துள்ளது.

ஆருங்கற்களாலும், முட்கம்பிகளாலும் நிர்மாணிக்கப்பட்ட சுவர்ஒன்று பெர்லின் நகரத்தினை இரு கூறுகளாகக் கடந்த ஐந்து ஆண்டுகாலமாகப் பிரித்துக் கொண்டிருக்கிறது. இச்சுவரைஎல்லைக்காவலர்கள் பாதுகாத்து வருகின்றார்கள்.


இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பிற்பாடு உருவாகிய வல்லரசுகள் உடன்படிக்கை; ஜெர்மனி நீண்டகாலமாகப் பிரிந்தே இருப்பதற்கு வித்திட்டது. அன்று அரும்பிய பிரிவு, ஜெர்மன் தலைநகராக இருந்த பெர்லினை மட்டும் இரண்டாகப்

'அரசகேசரி'

பிரிக்கவில்லை...! ஜெர்மன் மக்களையும் இரு கூறுகப் பிரித்துக் விட்டது.

### இயற்கை மடிந்தது

இன்று பெர்லின் வாசிகள் நகரம் எங்கும், முன்பு போல் சுயேச்சையாகத் திரிந்து தங்



கள்வாழ்வினை நடாத்தமுடியவில்லை. இங்கு, மனிதர்களுக்கே உரித்தான மனிதத்தன்மையினை நாம் காணமுடியவில்லை. ஆகையால், இயற்கையான விடயங்கள்யாவும் இயற்கைத்துவத்தினை இழந்துள்ள நிலை உருவாகியுள்ளது.

அனேக மனைவிமார்கள் தங்கள் தங்கள் கணவன்மார்களுடன் சேர்ந்து வாழமுடியவில்லை. நேசக்கரம் நீட்டி, பாசத்துடனும் பரிவுடனும் தாம் பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தைச் செல்வங்களை வாரியணைக்க முடியாமல் தத்தளிக்கும் தாய்மார்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. உடன் பிறந்த சோதரன், தன் உடன் பிறப்புக்களை சந்திக்க முடியாமல் மனமுருகக் கலங்கும் காட்சிகள் சர்வசாதாரண காட்சியாகும்.

### தடையை மீறினால்

இன்று கிழக்கு பெர்லின் வாழும் ஜெர்மன் மக்கள், மேற்கு பெர்லினில் வாழும் உறவினர்களை சந்திப்பதற்கோ. மேற்கு பெர்லின் வாழும் மக்கள் கிழக்கு ஜெர்மனியில் வாழும் உறவினர்களைச் சந்திப்பதற்கோ தங்கள் உயிர்களையேபணயம் வைக்க வேண்டியுள்ளது. கிழக்கு பெர்லின் மக்கள், மேற்கு பெர்லினுக்குள் நுழைவதற்கோ மேற்கு பெர்லின் மக்கள் கிழக்கு பெர்லினுக்குள் நுழைவதற்கோ இருபக்கங்களிலுமுள்ள அதிகாரத்தினர்கள். அனுமதிக்குப் பதிலாகத் துப்பாக்கி ரவைகளினையே வழங்குகின்றார்கள். அத்து மீறி, எல்லைச் சுவரினைத் தாண்டி மேற்கு பேர்லின் பகுதிக்கோ கிழக்கு ஜெர்மன்பகுதிக்கோ நுழைய முயலும் ஜெர்மனியர்கள், பிடிபட்டால், இராணுவத்தினர்களின், சித்திரவதைக்கு ஆளாக வேண்டியுள்ளது.

கிழக்குப்பகுதியில் வாழும் ஒரு பிரசை, மேற்குப் பகுதியில் உள்ள ஓர் பிரசைக்கோ, மேற்குப் பகுதியில் வாழும் ஒரு பிரசை கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு பிரசைக்கோ சுவருக்கு அப்பால் நின்று கொண்டே கை அசைத்தாலும், அதுதத்தம் 'நாட்டிற்குவிரோதமான செயல்', என்றே கணிக்கப்படுகின்றது.

### 'எங்களை மறந்து விடாதீர்கள்'

கிழக்குப்பகுதியில் உள்ள ஜெர்மனியர், மேற்குப் பகுதியில் உள்ள உறவினர்களுக்கோ, மேற்குப்பகுதியிலுள்ள ஜெர்மனியர் கிழக்குப் பகுதியிலுள்ள உறவினர்களுக்கோ எழுதும் கடிதங்களில் எல்லாம், 'எப்பொழுது நாம்மறுபடியும் சந்திக்கப் போகிறோம்?' எனத்தங்கள் ஏக்கத்தினை வெளியிடுகின்றார்கள்.

கிழக்கு ஜெர்மன் மக்கள் மேற்குஜெர்மன்மக்களுக்கும் மேற்கு ஜெர்மன் மக்கள் கிழக்கு ஜெர்மன் மக்களுக்கும் எழுதும் கடிதங்களில் ஒரேமன்றாட்டமானவேண்டுகோள் இது தான், 'உங்களைக் கெஞ்சுகின்றோம்' எங்களை மறந்துவிடாதீர்கள்...!

இதற்கெல்லாம் காரணம். ஜெர்மன் நாடு இரு அரசுகளாகப் பிளவு பட்டிருப்பது தான். இணைக்கப்பட்ட ஐக்கிய ஜெர்மனி உருவாக்கப் பட்டாலன்றி இத்தகைய அநீதிகளை அகற்றுதல் சாத்தியமன்று. ஜெர்மன் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை ஐ. நா. ஏற்றுக் கொள்ள வேண்டும். வல்லரசுகளின் கெடு பிடிக்கஞ்சி ஐ. நா. இதனைத் தட்டிக் கழித்துக் கொண்டிருப்பது ஐரோப்பாவின் சமாதானத்துக்கே ஆபத்தாகும்.

## 60,000 செலவில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்க முயல்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது'

இதற்கானவற்றைச் செய்ய ஓர் சபையும் தெரிவு செய்யப் பட்டது.

இந் நிதிக் குழுவின் காப்பாளராக உயர் திரு: சா. ஜே. வே. செல்வநாயகம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ. செயலாளர்1 திரு. புதுமை லோலன், பொருளாளர், திரு. சு. நடராசா, தமிழரசுப்பாராளுமன்ற உறுப்பினர்களும், தொகுதிக்கு இருவரும் உறுப்பினராகத் தெரியப்பட்டனர்.

KASA NASINI
காச நாசனி

"காச நாசனி" எல்லாவிதமான இருமல்களையும்; அவை, எவ்வளவு நாள் பட்டதானாலும், கடுமையானதானாலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்றோங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.

"ப்றதிச்சாய தகோகாஸ:
காஸால் ஸம்ஜாயதேஹய"

என்னும் பிரமாணப்படி; பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனாகக் கண்டு பிடிக்கப்பட்ட இம் மருந்தின், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றொரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15 - 25 சொட்டுகள்
விகிதம் தினம் மூன்று முறை.
விலை: 1 அவு. போ. ரூ. 5/-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80, புதுச்செட்டித் தெரு
கொழும்பு - 13.

# தேவர் செய்யவிருக்கும் "புரட்சி"



விரைவில் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் காட்சி தரவிருக்கும் இலங்கையில் தயாரான 'கடமையின் எல்லை' படத்தில் திடுக்கிட வைக்கும் ஒரு கட்டம்.

## இலங்கையில் தயாரான "கடமையின் எல்லை"

ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியரின் படைப்பான 'ஹம்லற்'றைத் தழுவி எமது கலை கலாச்சாரப் பண்பாட்டைப் பிரதிபலித்து இலங்கையில் இலங்கை நடிக நடிகையர் கலைஞரைக்கொண்டு தயாரித்து, அக்டோபர் 4ந் திகதி முதல் சிலோன் தியேட்டர்ஸ் சர்க்யூட் திரைகளில் திரையிடக் காத்திருக்கிறது. சவாபவன பிலிம்ஸ் அளிக்கும் திரையோவியமான 'கடமையின் எல்லை' பிறநாட்டார் நடிப்புத் திறனுக்கும் கலை ஆர்வத்திற்கும் நாட்டிய நடன இசைக்கும் ஈழத்துத் தமிழர் சளைத்தவர் அல்லர் என்ற உண்மையைக் கடமையின் எல்லை பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தனிப்பெரும் கலைத்திறனையும், கலைஞர்களையும், அன்னவர் ஆடல் பாடல்களையும், வாட்சண்டை, குதிரையேற்றம் போன்ற திகில் சாகஸங்களையும், காதற் காட்சிகளையும் ஒருங்கே பின்னிப் பிணைத்துப் பெரும் கலைவிருந்தாகக் 'கடமையின் எல்லை' இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஈழத்தில் உள்ள திறமைமிக்க நடிகர்களையும் கலைஞர்களையும் ஒன்றுசேர்த்து, வாட்போர் குதிரை ஏற்றம் போன்ற திகில்மிக்க சார்கஸ் செயல்களில் நடிகர்களுக்குப் பயிற்சிகொடுத்து ஈழத்தின் கலைவிருந்தாக கடமையின் எல்லையை உருவாக்கிய பெருமை இவருக்கே உரியது.

இரத்தம் சிந்தி உயிரைத் தியாகம் பண்ணி உருவாக்கப்பட்ட கடமையின் எல்லை, ஈழத்தின் சரித்திர ஏட்டிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சாதனையை நிலைநாட்டும் என்று கூறப்படுகிறது. 'கடமையின் எல்லை' படத்தில் மன்னார் எம்பி' திரு. வீ. ஏ. அழகக்கோன்,னின் மகன் தேவன் அழகக்கோனுட்பட உட்பட 50க்கு மேற்பட்ட கலைஞர்கள் நடித்துள்ளனர்

## 'ஸ்டண்ட்' இல்லாத படம் எம். ஜி. ஆர். கதாநாயகன்

### சுவையான தகவல்கள் இன்னும் பல தருகிறார்

எம். ஜி. ஆரை கதாநாயகனாக வைத்து, அதுவும் சண்டைக்காட்சிகள் எதுவுமின்றி ஒரு படத்தைத் தயாரிக்க திட்டமிட்டு வருகிறார் சாண்டோ எம். எம். சின்னப்ப தேவர். தேவராவது சண்டையில்லாமல் படம் தயாரிப்பதாவது என்று அசந்து போய் விடாதீர்கள். இதோ, தேவரே கூறுவதைப் படியுங்கள்

'என் அன்னை சில ஆண்டுகளுக்கு முன்னால் சொன்ன சில சொற்களே - அவற்றைக் கொண்டு ஒரு படம் தயாரிக்க எனக்கு ஆர்வமுண்டாக்கின. அன்னை தந்த அருமையான கருத்தை வைத்து 'தாய்க்குத் தலைமகன்' என்ற பெயரோடு படம் ஒன்றை எடுக்க சென்ற ஓராண்டு காலமாக திட்டமிட்டு வருகிறேன்.

'மக்கள் திலகம் எம். ஜி. ஆரிடமும் அந்தப்படக்கதையின் சில முக்கியமான பகுதிகளைச் சொன்னேன். படத்தின் தலைப்பையும், கதையின் கருவையும் அவர் மிகவும் பாராட்டினார். அண்மையில் தனிப்பிறவி படபிடிப்பு முடிவடையும் கட்டத்தில் எம். ஜி. ஆர். என் அன்னையின் கருத்துக்கள் கொண்ட அந்தக் கதையை படமாக்கி விடச்சொன்னார்.

#### உருக்கமான கதை

'ஆனால் திரைப்பட வரிசையில் அந்தக்கதையை படமாக்க எனக்கு விருப்பமில்லை. குடும்பத்திலுள்ள சகோதர உணர்ச்சி, அன்னையின் பாசம், புதிதாக அந்தக் குடும்பத்தில் வந்து சேருகின்ற மருமகளின் நிலை, ஆகியவைகளினால் பின்னப்பட்ட மிக உருக்கமான கதை அது.

'எம். ஜி. ஆரிடமும் சொன்னேன். 'அவசரப்படாமல் நிதானமாக பெரிய அளவில் திட்டமிட்டு அதைப்படமாக்கப்போகிறேன். அதில் நீங்கள் தான் கதாநாயகனாக நடிக்க வேண்டும். ஆனால் அந்தப்படத்தில் ஸ்டண்ட் காட்சிகள் இடம்பெறப்போவதில்லை., என்று எம். ஜி. ஆரிடம் நான் தெரிவித்த போது அவர் அப்படியே அசந்துபோனார். தேவர் தான் இப்படிச் சொல்லுகிறாரா, ஸ்டண்டுகள் இல்லாமல் படம் எடுக்கப்போகிறாரா? என்று எம். ஜி. ஆருக்கு தோன்றியிருக்கும்.

'எம். ஜி. ஆருக்கு எப்படித் தோன்றினாலும் சரி, என் அன்னை கொடுத்த கருத்து அரும்பெரும் படமாக ஒரு நாள் வரத்தான் போகிறது. ஒவ்வொரு நாளும் அந்த அருமையான படக்கதையில் எப்படி சம்பவங்களை நுழைக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டே இருக்கிறேன்.'



பார்த்தாலே கடமையே உருவான டாக்டர் இவர் என்பது புரிகிறதல்லவா? எத்தனையோ உயிர்களைக் காத்த இந்த டாக்டரின் 'காக்கும் கரங்கள்' இப்பொழுதும் எவரையோ காப்பாற்றப்போகின்றன போலும்! - கடமையே உருவான ஒரு டாக்டரின் சோகக்கதையான 'காக்கும் கரங்களில்' எஸ். எஸ். ஆர்., மணிமாலா - இப்படம் விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கிறது.


சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும் திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி : 7651

# எம். ஜி. ஆர். எஸ்.எஸ்.ஆர். க்கு இல்லாத வரவேற்பு

# இந்தி நடிகைகளுக்கு மட்டுமே ஏன்?

## இந்தியத் தூதரகம் பாரபட்சம் காட்டுகிறதா?

## தமிழ் சினிமா வட்டாரத்தில் எழுந்துள்ள குமுறல்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் நடிக நடிகையர்களை வரவேற்பதில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரகம் பாரபட்சமான கொள்கையை கடைப்பிடிப்பதாக தென்னிந்திய சினிமா வட்டாரங்களில் பலத்த அதிருப்தி நிலவி வருகிறது. சமீபத்தில் இங்கு வந்த நூடன், ஜபீன் ஆகிய இந்தி நடிகைகளுக்கு விழுந்தடித்துக்கொண்டு வரவேற்பளித்த இந்தியத் தூதுவரகம், பத்து மாதங்களுங்கு முன்பு இலங்கை வந்த மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களுக்கும், அதற்குப் பின் வந்த இலட்சிய நடிக தம்பதிகளுக்கும் வரவேற்புக் கொடுக்கத் தவறியதுபற்றி தமிழக சினிமா வட்டாரங்கள் மனவேதனையடைந்துள்ளதுடன், தமிழ் நடிக நடிகையர்களுக்கும், இந்தி நடிகநடிகைகளுக்குமிடையே இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரகம் பாரபட்சம் காட்டுகிறதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

சமீபத்தில் இலங்கைக்கு வந்து சென்ற வட இந்திய நடிகைகளான நூடன், ஜபீன் இருவருக்கும் இங்குள்ள இந்தியத் தூதரகம் வரவேற்பும் விருந்தும் அளித்து கௌரவித்தது நேயர்கள் அறிந்ததே.

இச்சம்பவம் குறித்து தமிழக சினிமா வட்டாரங்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளன. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர் அவர்கள் 10 மாதங்களுக்கு முன்பு இலங்கை வந்திருந்தார். எம். ஜி. ஆர் அவர்கள் சாதாரண நடிகரல்ல. தென்னிந்திய சினிமா உலகிலே அதிக செல்வாக்கும், புகழும் மக்கள் ஆதரவும் பெற்ற பெருங் கலைஞர். அப்படிப்பட்டவருக்கு இந்தியதூதரகம் எந்த வித வரவேற்பும் அளிக்கவில்லையென்றும், அதற்குப் பின்பு வந்த எஸ். எஸ். ஆர். விஜயகுமாரிக்கும் கூட எவ்வித வரவேற்பும் அளிக்கப்படவில்லையென்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. எஸ். எஸ். ஆர் அவர்கள், தமிழக சட்ட மன்ற உறுப்பினராகவும் விளங்குகிறார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.


இவர்கள் இருவரும் வந்தபோது திரும்பியும் பார்க்காத தூதுவரகம், நூடனுக்கும், ஜபீனுக்கும் மட்டும் விழுந்தடித்துக் கொண்டு வரவேற்பளித்தது அவர்கள் இருவரும் இந்தி நடிகைகள் என்பதினாலா என்றும் கேட்கப்படுகிறது. வடக்கு தெற்கு என்று இந்தியத்தூதரகம் பாரபட்சம் காட்டுகிறதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.



## விஜயா வாழ்வில் மறக்க முடியாத சம்பவம்

உங்களுடைய வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஏதாவது உண்டா என்று நடிகை கே. ஆர். விஜயாவிடம் கேட்ட போது, 'ராமு' படத்தில் நடிக்கும் போது நடைபெற்ற ஒரு சம்பவம் என்றுமே மறக்க முடியாதது என்று கூறிவிட்டு விபரித்தார்.

'என்னையும் குழந்தையையும் கட்டிப் போட்டு விட்டு வில்லன் ஒ. ஏ. கே. தேவர் எங்கள் வீட்டுக்கு தீ வைத்து விடுகிறார். இக்காட்சியை படமாக்கும் போது வீடு தத்ரூபமாக எரிய வேண்டும் என்பதற்காக டைரக்டர் திரிலோகசுந்தர் வைக்கோலைப் பரப்பி மண்ணெண்ணையை ஊற்றிக் கொளுத்தி விட்டார். அவ்வளவு தான்! சற்று நேரத்தில் தீ சுவாலை பற்றி எரிந்தது. வெயில் நேரம் வேறு. தீயின் காங்கை என்னுடலைப் பொசுக்கியது. அதோடு எங்கும் புகையும் சூழ்ந்து கொண்டது. புகையினால் மூச்சு விட முடியாமல் திணறினேன். என்னால் முடிந்த வரை சமாளித்துப் பார்த்தேன் முடியவில்லை. மூச்சுத்திணற, கண்கள் செருக மயக்கமடைந்து விட்டேன்.' மயக்கம் தெளிந்து பார்க்கையில் டைரக்டரும், தயாரிப்பாளர்களும் மற்றவர்களும் கவலையோடு என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் எழுந்து உட்கார்ந்ததும் தான் எல்லோருக்குமே உயிர் வந்தது' என்றார் அழகி விஜயா.



அலைபாயும் கண்களினால் ஆனினத்தை வலை விரி மயக்க வைக்கும் பளிங்குப் பாவையான அழகி விஜயாவை விரைவில் சினிமாஸ் ஸ்தாபனத்தார் திரையிடவிருக்கும் 'தொழிலாளி'யில் காணலாம்.



திரைநோக்கு

## பணம் படைத்தவன்

மேலைநாட்டு நாகரிக மோகம் எந்தளவு தூரம் நமது சமுதாயத்தில் தாக்கம் ஏற்படுத்தி சீரழித்து வருகிறது. என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது சினிமாஸ் திரைகளில் திரையிடப்பட்டிருக்கும் 'பணம் படைத்தவன்' என்னும் திரைச்சித்திரம். இராஜா என்ற இளைஞன் விளையாட்டுப் போட்டியொன்றில் கலந்து கொள்வதற்காக கல்கத்தா செல்கிறான். கல்கத்தாவில் அவனை சேர்ந்தவர்கள் அறிமுகம் கிடைக்கிறது சாதாரண அறிமுகம் திருமணம்வரை இழுத்து வந்து விடுகிறது. கல்கத்தா பெண்களின் மேலை நாட்டு நாகரிக மோகத்தை இராஜா விரும்பாத போதிலும் தம்பியின் காதலை நிறைவேற்றும் விருப்பில் அக்குடும்பத்தின் மூத்தபெண்ணையும் அவன் வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொள்கிறான். இதற்கிடையில் அவ்வீட்டு வேலைக்காரியை இராஜா மனதால் தன்னவளாக வரித்துக்கொள்கிறான். முடிவில் நவநாகரிகம் மடிகிறது. வேலைக்காரியான சாந்தி இராஜாவினவளாகிறாள்.

கதையின் கரு உயர்ந்திருக்கிறது. ஆனால் மூன்று மணி நேரம் படத்தை ஓட்டவேண்டுமென்ற விருப்பத்தின் பேரில் கதை இறப்பர்ப்பத்தாக இழுக்கப்படுகிறது.

இராஜாவாக எம். ஜி ஆரும், அவரின் காதலி சாந்திாக கே. ஆர். விஜயாவும், அவனின் கல்கத்தா மனைவியாக சௌகார் ஜானகியும் வருகிறார்கள். பொறுப்பை உணர்ந்துபெண்கள் நடித்திருக்கிறார்கள். சௌகாரின் நடிப்பு இடையிடையே ஓவராக இருப்பது போல் தோன்றினாலும் அது முழுமைப்படுத்துகிறது. விஜயா இரசிகர்களின் அபிமானத்தை மிக எளிதில் பெற்று விடுகிறார். எம். ஜி. ஆருக்கு பழக்கப்பட்ட பாத்திரம். கோட்டும் சூட்டுடன் கவர்ச்சிகரமாகத் தோன்றுகிறார்.

அசோகன் மீண்டும் துணை நடிகராக்கப்பட்டிருக்கிறார். பாலையாவுக்கு பழையபாத்திரம்தான்.


ஒலி, ஒளி சிறப்பாக இருக்கிறது, இசை ஒத்து வரவில்லை. பாடல்களும் குறிப்பிடக்கூடியதாக இல்லை.

தமிழர்கள் குறிப்பாக நமது நாட்டு இளம் பெண்கள் அவசியம் பார்க்கவேண்டிய படம் 'பணம் படைத்தவன்.'

—ll

## எதற்கும் ஓர் எல்லை

எதிர்வரும் 6-10-66 வியாழன் மாலை 6-30 மணிக்கு லயனல் வெண்ட் தியேட்டரில் ஜவாஹர் சகோதரர்கள் தயாரித்தளிக்கும் 'எதற்கும் ஓர் எல்லை' என்ற நாடகம் மேடையேறவிருக்கிறது.



கொழும்பு கிரௌன் படமாளிகையில் விரைவில் திரையிடக் காத்திருக்கும் இந்திப்படமான 'பொக்சர்' (Boxer) என்னும் படத்தில் ஒரு காட்சி.

# எச். ஜி. வெல்ஸ்

## எதிர்காலத்தை தரிசித்த எழுத்தாளன்

ஒரு இலக்கியப் படைப்பாளி, தான் வாழும் சமூக சூழலில், தான் பெற்ற வாழ்க்கை அனுபவத்தை, உணர்ச்சித் தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதுகிறான் என்று கூறுவது இன்று பொதுவான ஒரு இலக்கிய கருத்தாகிவிட்டது. தான் வாழ்ந்த, அல்லது வாழ்ந்து வரும் கால வரம்புக்கு உட்பட்டதாகவே எழுத்தாளன் வாழ்க்கையை தரிசிக்கிறான் என்பது இதன் அர்த்தம். இதுதான் உண்மையும்கூட. வாழும் காலத்தைக் கடந்து எதிர்காலத்தை தரிசிப்பதென்பது, கற்பனைக்கு சாத்தியமாயினும், பொதுவான இலக்கிய நியதியிலிருந்து பிறழ்வுபடுவதால் அதனை கலைப்படைப்பாக உண்மை இலக்கியமாக கொள்வாரில்லை. அதே வேளை எதிர்காலத்தை உணர்ந்து, தீர்க்க தரிசனம்கூறும் ஆற்றல் சிருஷ்டிக் கர்த்தாக்களிடையே காண்பதரிது. ஆனால் எச். ஜி. வெல்ஸ் இதற்கு முற்றிலும் விதிவிலக்கானவர்.

அவரது சிந்தனையும், கற்பனா வேகமும் எதிர்காலத் திரையை கிழித்து, வாழ்க்கையை முன்னோக்கி, தரிசித்துள்ளன. அவரது விஞ்ஞான புனைகதைகள் யதார்த்த வாழ்க்கைக்கு புறம்பான விநோத கற்பனை சிருஷ்டிகள் போல் தோன்றினாலும் அவற்றில் எதிர்கால மனித சமுதாயத்தின் போக்கினை நிச்சயிக்கும் துடிப்பு இல்லாமல் இல்லை.

### ஆற்றல்

வெல்ஸின் விஞ்ஞான புனைக்கதைகள் சம்பந்தப்பட்டமட்டில் அவற்றைஇலக்கிய அளவுகோல்களைக் கொண்டு மதிப்பிட்டு எடை போடுவது தவறு. விஞ்ஞான வளர்ச்சி மனித சமுதாயத்தில் எத்தகைய தாக்கத்தை விளைவிக்கக்கூடும், என்பதை அறிய விழையும் ஆவல்தான் அவற்றில் பிரதிபலிக்கின்றனவே தவிர கலாம்சம்பற்றி அவர் சிந்தித்ததாகத் தெரியவில்லை. அவர் தீர்க்க தரி



சனம்கூறியவை இப்பொழுது விஞ்ஞான உண்மைகளாகி விட்டமையால் அவரது தீர்க்கதரிசன ஆற்றலை, மதிநுட்பத்தைமட்டுமே நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்,இலக்

### 'பிதாமகர்'

கியாம்சத்தையல்ல.இதனால் அவர் கடந்த காலத்தை பிரதிபலிக்கும் ஒரு நிழலாக இல்லாது நிகழ்கால, எதிர்கால சக்திகளின் தோற்றமாய் விளங்குகிறார்.

எதிர்காலத்தை உணரும் அற்புத சக்தியை மட்டும் கொண்டிராது தான்வாழ்ந்த காலத்தில், தனதுவாழ்க்கை அனுபவங்களை, உணர்ச்சிகளைக் கொண்டு சக்திமிகுந்த சமூக நாவல்களையும் அவர் படைத்திருக்கிறார்.'ஹிப்ஸ்', 'மிஸ்டர்—பொலி', 'டொனொ பங்கெ' போன்ற நாவல்கள் இதற்கு உதாரணங்கள்.

### நம்பிக்கை

சமுதாயத்தில் முக்கியத்துவம் இழந்த சாதாரண மனிதர்களின் வாழ்க்கை முரண்பாடுகளை அவர்களது எண்ணங்கள்,அபிலாசைகளை அழகுற சித்தரிக்கும் கலைப் படைப்புகள் இவை; டிக்கன்ஸ் பாணியில் வீதியில் அலையும் சாதாரணமனிதனை அமரத்துவ பாத்திரமாக படைத்து சமுதாயத்தின் பல்வேறு தாக்கங்களை அவனது உணர்ச்சிக்கிறல்களால் கோலமிட்டுக்காட்டும் வெல்ஸின் திறமை இந் நாவல்களை வாசிப்போருக்கு பிரமிப்பூட்டுவதா யுள்ளன. சமுதாயத்தில் பரந்து கிடக்கும் அறியாமை, மூடக்கொள்கைகள், போலி அரசியல் வாதங்கள்ஆகியவற்றை சாடி, இவற்றில் பின்னிப் பிணைந்து இடர்படும் மனிதர்களின் அவல வாழ்க்கையை நகைச்சுவை ததும்ப கிண்டல் செய்து காட்டும் அவரது கூரிய பார்வை அவரை ஒரு சிறந்த நாவலாசிரியராகபுகழேணியில் ஏற்றியுள்ளது.

நாவல்கள்,விஞ்ஞான புனைகதைகளை மட்டும் அவர் படைக்கவில்லை. கல்வி, சரித்திரம், அரசியல், சமூகவியல் போன்ற பல துறைகளில் அவர் தமது ஆற்றலை காண்பித்திருக்கிறார். வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை அணுகி அவற்றை உன்னிப்பாக நோக்கும் ஆற்றல் அவரைத் தவிர வேறெந்தஎழுத்தாளரிடமும் காண்பதரிது.

மனிதசமுதாயத்தின்எதிர்கால சுபீட்சம்பற்றியேஅவர் சிந்தித்தார்.விஞ்ஞானவிருத்தியும்,பொருளாதார வளர்ச்சியும் தான் மனிதனுக்கு வாழ்வளிக்கும் சாதனங்கள் என்பது அவரது நம்பிக்கை. அவரதுஎழுத்துக்களும் இந்த நம்பிக்கையே பிரதிபலிக்கின்றன.

## பேயாடிகள்

: சாலை இளந்திரையன் :

வாயாடி வாயாடி வாழ்வை விழலாக்கும்
பேயாட்டம் ஆடப் பிறந்தார் பலபேர்கள்!
தேவையோ இல்லையோ, பேசித் திரிகின்றார்;—
கோவையோ இல்லையோ, கொட்டிக் குவிக்கின்றார்!

மூச்சைத் தொலைக்கும் முழுவேகப் பேச்சுக்கள்
ஏச்சில் இளிக்கும் இடரான பேச்சுக்கள்,—
வேண்டாத பேச்சு, விளங்காத வாயாடிகள்,
காண்டா மணியின் கதறல்போல் கூச்சல்கள்!

என்னதான் காதோ? -இரைச்சல் மடமடப்புத்
தன்னில் கிழியாமல் தாக்குப் பிடிக்கிறதே!...
என்செவியின் மென்மை எவர்செவிக்கும் இல்லையோ?—
வன்மைச் செவிஎனக்கு வாய்க்கத்தான் இல்லையோ?

மூச்சு விடாமல் முடங்கிக் கிடப்பதற்குக்
கூச்ச மிராதோ?—குவலயத்தில் மற்றவர்கள்
உள்ளனரே என்னும் உணர்வே இருக்காதோ?
தள்ளுகிறார் மூச்சைத், தடையின்றித் தள்ளுகிறார்!

நில்லாத பேச்சிலே நெஞ்சம் மகிழ் கின்ற
பொல்லாரை விட்டுவிட்டுப் போய்த்தொலைய வேறுலகம்
இல்லையே...! கோள்களே, இம்மனித ரில்லாத
நல்லவ ராயினிர்;—நானும்மை வாழ்த்துகிறேன்......

**அமெரிக்காவில் நீக்ரோ மக்களிடையே மீண்டும் கொந்தளிப்பு! அஹிம்சைஉபதேசம் இனிமேல் பயன்படாது என்கிறார் அவர்களின் ஒப்பற்ற தலைவர் டாக்டர்கிங். இதுவரை அவர்கள் கையாண்டுவந்த சாத்வீக கொள்கையைக் கைவிடும் அளவுக்கு அங்கு நிற வெறித் தாண்டவம் எல்லை மீறி விட்டது.**

## சாத்வீகத்தைக் கைவிடுவார்கள்?

### நீக்ரோ தலைவரின் எச்சரிக்கை

அமெரிக்க வெள்ளையர்களின் நிறத்துவேஷத்துக்கு எதிராக அமைதியான சாத்விக முறையில் இதுவரை கிளர்ச்சி நடத்திவந்த நீக்ரோமக்கள், தமது சாத்விகக் கொள்கையைக் கைவிட்டு பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கப் போகிறார்களா? சென்ற வாரம் அமெரிக்க செனட் சபையின் ஒரு தீர்மானத்தை வொட்டி நீக்ரோத்தலைவர் டாக்டர் மாட்டின்கிங் தெரிவித்த கருத்தின் காரணமாகஇந்தக் கேள்வி எழுந்துள்ளது.

அமெரிக்காவில் தாண்டவமாடும் நிறவெறியை எதிர்த்து டாக்டர் கிங் தலைமையில் நீக்ரோக்கள், அகிம்சா அடிப்படையில் பலகாலமாக போராடி வருவது தெரிந்ததே. நிறத்துவேஷத்தை எதிர்த்து கென்னடியின் பாதையில் செயலாற்றி வரும் சனநாயகக்கட்சியினர், வீடுகளிலும் அரசாங்க கட்டிடங்களிலும் நீக்ரோக்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டப் படுவதை தடை செய்யக் கூடிய ஒரு சிவில் உரிமை மசோதாவை அமெரிக்க செனட்டில் சென்ற வாரம் சமர்ப்பித்திருந்தார்கள். இந்த மசோதா மூன்றில் இருபங்கு வாக்குகளை பெறத்தவறியதால் தோல்வியடைந்துள்ளது.


இந்த மசோதா தோல்வியடைந்த பின், நீக்ரோ தலைவர் டாக்டர் கிங் பேசிய பேச்சு, நீக்ரோக்கள் இனி மேலும் தொடர்ந்து சமாதான முறையில் அஹிம்சா வழியில் போராட்டம் நடத்துவதை தவிர்த்து, பலாத்கார வழிகளில் இறங்கமுடிவு செய்திருக்கிறார்கள் என்பதை குறிப்பால் உணர வைத்திருக்கிறது. டாக்டர் கிங் பேசியது வருமாறு:

'எனது கண்களுக்கு இருண்ட காலங்கள் தான் தோற்றுகின்றன.


'1966ம் ஆண்டின் சிவில் உரிமை மசோதாவை தோற்கடித்தவர்கள் தமது செயலால் நீக்ரோ சமூகத்திலுள்ள பலாத்கார சக்திகள் தலைதூக்க உதவி அளித்திருக்கிறார்கள்.

'நான் தொடர்ந்து அஹிம்சைபற்றி போதித்து வந்தாலும் கூட, எனது பேச்சுக்கள் இனி நீக்ரோ மக்கள் மத்தியில் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகி விடும்'

இவ்வாறு நீக்ரோ இனத்தின் தலைவர் பேசியதிலிருந்து அந்த மக்கள் எவ்வளவு தூரம் ஆத்திர மூட்டப்பட்டிருக்கிறார்களென்பது தெளிவு. இதன் விளைவாக நிறவெறியைப் படுசூரணப் படுத்த நீக்ரோ மக்கள் கிளர்ந்தெழுந்து புரட்சிப் போராட்டத்தில் இறங்கினாலும் வியப்பன்று.

பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறைவாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தந்தி: தாமரை

தொலைபேசி: 3597-6522

# அலைகடல்தான் ஓயாதோ?

"செங்கை ஆழியான்"

வானத்தில் வெள்ளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்தன. நிலவற்ற வானின் கருமையை யக் கண் சிமிட்டும் நட்சத்திரப் பூக்களா போக்கும்?

அவனுக்குச் சிகரெட் ஊதுவது தான் வேலை. மெயில் விரைந்து கொண்டிருந்தது.

செல்லப்பரைப்பற்றி எண்ணும்போது அவனுக்கு உயர்ந்த மதிப்பே ஏற்படுகின்றது. எவ்வளவு அன்பும் பண்பும் நிறைந்தவர். ஏதோ நடந்து விட்டதைப் புரிந்து கொண்டு, என்னவென்பதை வற்புறுத்திக் கேட்காது விட்டுவிட்டார், அவருக்கும் சொல்லியழும் வரை, அவர் கேட்கவேயில்லை.

அவன் காலையில் எழுந்து கல்லூரிக்குப் போவான், பின் மாலையில் திரும்பித்தன் அறைக்குள் வந்து புகுந்து கொள்வான். நினைவுகள்... சிகரெட்டுகள்... கண்ணீர்...

பரிமளா!

அவள் இல்லாவிட்டால்...?

'மாஸ்ரர்!'

'என்ன...?' அவனுடைய பேச்சிலே பழைய கலகலப்பேயில்லை, உணர்வுகள் சாகாது, உள்ளத்தால் வேகும் அவன் எப்படி அவளின் அழைப்பிற்குப் பழைய பனிதலுக்கப் பதில் அளிப்பான்.

'இப்படியே எப்போதும் அழுது கொண்டிருந்தால்... என்ன நடந்தது மாஸ்ரர்! எங்களுக்குக் கூறவே கூடாதா? துன்பத்தைப் பகிர்ந்து கொண்டால் நிம்மதி ஏற்படும் என்பார்களே...'

பரிமளாவின் குரலிலே இழையோடிய இரக்கத்தில் அவன் ஒரு நிமிடம் ஊறிப் போனான். இந்தப்பெண்ணிற்குத் தான் அவனில் எவ்வளவு அன்பு!

துன்பத்தைப் பிறருக்குக் கூறிக் கொள்வதில் மனதிற்கு நிம்மதி ஏற்படவே செய்யும். ஆனால், அதே துன்பம் அவனுக்காக இரங்குபவர்களையும் வேதனைப் படவைத்தால்...? அவ ளதை அவனுக்குக் கூறினான்;

'உண்மையைச் சொன்னால் மாஸ்ரர், எங்களுக்குத் துன்பமில்லை, ஒழுங்காகச் சாப்பிடாமல், பேசாமல், பழகாமல், படுக்கையில் குப்புறக் கிடக்கும் காட்சி தான் எங்களுக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. சொல்லுங்கள். தயவு செய்து சொல்லுங்கள்! எனக்காகச் சொல்லுங்கோ...!'

'எனக்காகச் சொல்லுங்கள்!

நாகலிங்கம் எழுந்து அவளை உற்றுப்பார்த்தான்; அவன் இதயத்தின் ஒருமென் மூலை, இனந்தெரியாத சிறு மகிழ்வால் விரிந்து தாழ்கிறது. எத்தனை ஏமாற்றங்களுக்குப் பிறகு, திருத்த முடியாத ஒன்று, மலைபோல் உயர்ந்து நிற்க, அவன் இதய மூலையில் மகிழ்வா?

'நான் ஏமாந்துபோனேன், பரிமளா!'

பரிமளாவின் கண்கள் திடீரெனப் பனித்தன.

'நீங்கள் மட்டுந்தானா?...

'பரிமளா...!'

அவள் சுவரைப்பார்த்தபடி நின்றாள். அவள் குலுங்குவதிலிருந்து அழுகிறாள் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

— மெயில் விரைந்து கொண்டிருந்தது. அது துன்பம் நிறைந்த சம்பவம் என்றாலும் அதை நினைப்பதில் ஒரு நிறைவு. வறண்டுபோன தனது உதடுகளைத் தடவியபடி இருளினிடையே உற்று விழித்தான்.

அவள் நின்ற கோலம் இப்போதும் நினைவிலுண்டு.

'பரிமளா!'

அவள் குமுறிக்குமுறி அழுதாள்.

'நானும் ஏமாந்து போனேன், மாஸ்ரர்!'

'பரிமளா!'

அவள் 'விருட்'டெனத் திரும்பி அவனைப் பார்த்தாள். நெஞ்சு விம்மித் தணிய, கண்மலர்கள் பனித்துளிகளை இடையறாது சிந்த, மார்பக நீலச்சட்டை கருநிறமாகக் கண்ணீராகி மாறித் தோன்ற, மெலிந்த அவளுடல் மெதுவாக நடுங்கியது.

'மாஸ்ரர், உண்மையாகத் தான் கேட்கிறேன். காலந் தப்பித்தான் கேட்கிறேன். என்னை நீங்கள்புரிந்து கொள்ளவே இல்லையா?...'

அவனுக்குப் புரிந்து விட்டது; புரியவும் இல்லைப் போலுமுள்ளது.

'சிறுமி நீ, பரிமளா?'

'மாஸ்ரர்!' அவள் அழுதாள்: 'காலம் என்னை ஏமாற்றி விட்டது!'

அறைக்கதவடியின்றும்' யாரோ விலகிச் செல்வது போன்ற நிழலாட்டம். அவள் கதவடியில் வந்து நின்று பார்த்தாள்.

செல்லப்பர் நடந்து சென்று கொண்டிருந்தார்.

நெஞ்சு இலேசாக வலித்தது. கால்களை நன்கு நீட்டி, நிமிர்ந்து படுத்துக் கொண்டான். மெயிலின் 'கடகட' வென்ற சத்தத்தைத் தவிர வேறெதுவுமில்லை. எவ்வளவு நேரம்அப்படிக்கிடந்தானோ?

மெயில் குலுக்கிக்கொண்டு நின்றது போல உணர்வு விழித்து எழுந்து கொண்டான். நெஞ்சு வலி சிறிது அதிகரித்து விட்டது போல உள்ளது. வெளியே விளக்குகள் மின்னின.

வவுனியா ஸ்ரேசன்; யார் யாரோ இறங்கினார்கள்; ஏறினார்கள்.

மெயில் பழைய படி அசைந்தது.

பழைய கலகலப்பை அவன் மெதுவாக அடைந்து வந்தான், செல்லப்பரின் குடும்பம் பழைய மகிழ்வோடு இயங்கியது. பரிமளா எல்லாவற்றையும் மறந்து போனவள் போலப் பழகினாள். அவன் மாலைவேலைகளில் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பான்.

அவன் கலியாணம் செய்து கொண்ட நிகழ்ச்சிகள் யாவும் கனவோ என்று சிலவேளை மயங்குவான். கனவாக இருந்திருக்கலாம். கனவுகள் கணத்தோடு மனதை விட்டு நீங்கி விடுமோ? அவன் அவற்றைக் கனவாக வே நினைத்துக் கொண்டான். ஆனால், அவை கனவல்ல என்பதைச் சில நாட்களுக்குப் பின் வந்த சாரதாவின் கடிதம் நிரூபித்தது.

'ஈஸ்வரியைச் சிவநாதன் அழைத்துச் செல்லவில்லையாம்!

—ஏதோ எல்லாம் எழுதி இருந்தாள்.

'யாருக்காக நான் இதை எல்லலாம் செய்தேன்?'

அவன் மௌனமாக இருந்து விட்டான்.

பரிமளாவும், அவன் மனைவியும் முதன்முதலாக சந்தித்த வேளை நினைவில் வந்தது.

அது ஒருகாலை வேளைதான். அவன் படுக்கையை விட்டு எழும்பாமல், சிந்தித்தபடி கிடந்தான். அப்போது பரிமளாவின் குரல் ஒலித்தது!

'மாஸ்ரர்! மாஸ்ரர்! உங்கட அம்மா வந்திருக்கா...'

'விருட்' டென்று எழுந்தான், அவன்.

ஆச்சியா? தள்ளாத வயதிலை அவ ஏன் இங்கு வந்தா?

கதவைத்திறந்து கொண்டு விரைந்து வெளியேவந்தான்.

மின்னற் கொடிகள் கிளை பரப்பி அழிந்தன. பரிமளா விதிர் விதிர்த்துப் போய் சுவரோடு நின்றிருந்தாள். என்ன நடந்ததோ?

'நீயா?...'

'ஓ...நான்தான்!' பெண்களுக்குரிய மென்மை கூடவா குரலில் இருக்கக்கூடாது. அவன் மனைவி, தமையனுடன் நின்றிருந்தாள், பாவம், பரிமளா, என் மனைவியை அம்மா என்று எண்ணி......

'ஏன் வந்தனி?...'

'ஏன் வரக்கூடாதோ?'

—அவன் அதன் பிறகு பேசவில்லை.

அவள் தங்கிவிட்டாள். அவன் பிறகு தடுக்கவில்லை, ஏற்கனவே, செல்லப்பர் ஒழுங்கு செய்திருந்தபக்கத்து வீட்டில் குடிபோயினர். பெயரளவில்தான்.

அவனுடைய பொழுதின் பெரும் பங்கு செல்லப்பர் வீட்டில்தான் கழிந்தது.

ஆண்டவன் அவனை இவ்வளவு தூரம் வஞ்சித்திருக்க வேண்டாம். இடையில் தங்குவதற்குக் குளிர்நிழலாக எதுவுமின்றிப் பரந்த பாலையிலே திக்கற்று அவனை அலைய விட்டிருக்க வேண்டாம்.

அல்லது உள்ளம் என்ற ஒன்றைப் படைத்து, உணர்வுகளையும் படைத்து, இப்படி அவனை ஆட்டுவிக்க வேண்டாம். உணர்வற்ற சடமாக அவனைப் படைத்திருக்கலாம்.

எவ்வளவு ஏமாற்றம்?

அவன் தான் மனம் பேதலித்து, விரக்தியில் புரள்கிறான் என்றால், அவன் மனைவிக்கு என்ன?

அவள் மட்டுந் தனது அடங்காப்பிடாரித் தனத்தை விட்டு, அவனை அன்பால் தன்பால்வலித் திருக்கலாம்.

இன்றும் அவன் அதையே எண்ணுகின்றான். முதலில் அவளை அவன் வெறுத்தது உண்மையே. ஆனால் சில வேளைகளில் அவளுக்காக இவன் இரக்கப்படும் வேளைகளுமுண்டு.

அவள் மட்டும் தன் அன்பால் அவனை மடக்கியிருக்கலாம். அவள் தனது முகத்தில் கவலை என்பதையே காட்டவில்லை. நன்கு சாப்பிட்டு, தூங்கி, குசாலாக இருந்தாள்.

—கவலைப்படவே தெரியாத ஜென்மமா?

அவள் கவலையால் ஒரு தடவையாவது அழுதிருந்தாள், அவன் இரங்கியிருப்பான்.

தானும் கலியாணம் ஆனவள் என்ற பெயரோடு வாழத்தான் விரும்பினாள். பென்சன் வரக்கூடிய கணவன்தான் அவளுக்குத் தேவைப்பட்டது.

மெயில் மெதுவாக ஊர்ந்தது.

அவன் பழையபடி இருளை வெறிக்கத் தொடங்கினான். அவளோடு அவன் பழகிய விதங்கள் யாவும் நினைவில் வந்தன.

கல்லூரிக்குச் செல்லும் வேளைகளில், வழியில் சில ஜோடிகளைச் சந்திக்க நேரும். கணவனோடு சிரித்தப் பேசியபடி இணைந்து நடக்கும் மனைவியைக் காணும் போது வாழ்வில் பெற வேண்டிய ஒன்றைத் தான் இழந்து விட்டது போல உணர்வான்.

ஒருநாள் ஒரு இளம் ஜோடியை அவன் சந்திக்க நேர்ந்தது. ஆடவன் ஏதோ சொல்ல, அவள் தலை குனிந்து வெட்கப் பட்டுச் சிரித்தளே? அந்தக் கணத்தோடு அவர்கள் அழிந்தாலும், அந்த ஒரு கணவாழ்வு அவர்களுக்குப் போதுமே?

—அவன் பாக்கிய மற்றவன்.

சிலர்தான் வாழக்கொடுத்துவைத்திருக்கிறார்கள்.

செல்லப்பர் சிலவேளை அவனுக்கு ஆறுதல் கூறுவார்.

'தம்பி' உமது வாழ்வு இப்படியா அமைய வேண்டும்!'

அவன் வேதனையோடு சிரிப்பான்.

இன்னொரு சம்பவம் நினைவு வந்தது.

அவன் ஒரு சாதாரண ஆசிரியன், பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பிற்கு இரவு பகலாகப் படித்துக் கொண்டிருந்த வேளை, படிப்பிலே கவனத்தைத் திருப்பி நிம்மதி பெற விழைந்த வேளை.

இலேசாகத் தொட்ட காய்ச்சல் அவனைப் படுக்கையில் வீழ்த்தி விட்டது. அதே வேளை பார்த்து, மாமன் சுப்பிரமணியத்திற்கு சுகமில்லை மில்லை என்று கடிதம் வந்தது. அவள் மாமனைப் பார்க்கப் புறப்பட்டுப் போய்விட்டாள்.


செல்லப்பர் எவ்வளவோ கூறிப்பார்த்தார்.

அவள் கேட்கவில்லை,

அன்று தான் செல்லப்பர் கூறினார்;

'தம்பி; நீ இவளை விலத்தி விடு...'

அப்போது பரிமளாவும் கூட நின்றாள்.




## மகாகவி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயின் கையை வர்ணிக்கும் போதும் 'அன்ன மூட்டிய தெய்வ மணிக்கரம்' என்று வருணித்துத் தாயின் கையில் 'அழகும் தெய்விகமும் தியாகமும்' சேர்ந்து இலங்குவதைச்சக்தி வாய்ந்தசொற்களால்பாடிய பெருமையைப் பெற்றுவிட அவரால் முடியும். பாரதியின் கவிதைகளில் மேலே காட்டிய மாதிரிச் சில இலநயமான சொற்றொடர்களின் ஆற்றலையும், அழகையும் பற்றியே மணிக்கணக்காகச் சிந்தித்து மகிழ்ந்திருக்கிறேன் நான். பட்டுக் கத்தரித்தாற் போன்ற இந்தச் சொற்பிரயோகத்தைப் புதிய தலைமுறைக் கவிகளில் பாரதி ஒருவரிடமே காண முடிகிறது. 'சொல் ஒன்று வேண்டும்—நமக்குள்ளே தேவ சக்திகளை நிறைக்கும் சொல் ஒன்று வேண்டும்'-என்று பாரதியாரே பாடியிருக்கிறார்போல் தேவ சக்தி பெற்று ஒளிரும் வனப்பும் வீரமும் வாய்ந்த சொற்றொடர்கள் பலவற்றைப் பாரதியார் உருவாக்கியிருக்கிறார். அந்தச் சொற்றொடர்களை எல்லாம் படித்துப் படித்துச் சிந்தித்துச் சிந்தித்து மகிழும் போது,

'How forcible are right Words!'-என்றுச் சொல்லிப் பலமுறை பாரதியை வியக்கத் தோன்றும்.

'தந்தையர் நாடென்ற
பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது
மூச்சினிலே'-

என்று நாட்டைப்பற்றிப் பாரதியார் பெருமிதம் கொண்டதுபோல் இன்று பாரதியாரின் சொல்லாட்சியிலுள்ள உயிர்த்துடிப்பைப் புகழ்ந்து புகழ்ந்துபெருமிதப் படலாம் நாம். மாதிரிக்கு மிகச் சில சொற்றொடர்களைத்தான் இந்தக் கட்டுரையில் காண்பிக்க முடிந்தது. ஆனால் தன்னுடைய தனி முத்திரையும் நயமும் பதியும்படியான இத்தகைய சொற்பிரயோகம் பாரதியாரின் கவிதைகளில் ஏராளமாக உண்டு என்பதை ஆழ்ந்து ஈடுபடுகிறவர்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடியும்.

## தி. அ. வா. மு: நெல்லியடி கிளை புதிய அலுவலர்கள்

நெல்லியடி தமிழரசு வாலிபமுன்னணியின் நடப்பு வருட தலைவராக திரு. தே. மிக்கல்ராசா அவர்களும், செயலாளராக மீண்டும் திரு. க. செ. சுவர்ணராசாவும், பொருளாளராக திரு; சி. செல்லத்துரைஅவர்களும் உப செயலாளராக திரு. தா. சிவசுப்பிரமணியம் அவர்களும், உப தலைவராக திரு. கு. இராஜகோபால் அவர்களும், தமிழ் அரசு வாலிப முன்னணியின் பொதுச் சபைக்கு கிளையின் தலைவர், செயலாளர், பொருளாளர், உப செயலாளர்களுடன் திரு. சி. காங்கேசு, திரு. க. தர்மலிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## தி. அ. வா. மு. புத்தூர் கிளை

மேற்படி கிளை 14-7-66 வியாழக்கிழமை 5 மணிக்கு புத்தூர் கிழக்குப் பகுதியில் தமிழரசு வாலிப முன்னணி பொதுச் செயலாளர் திரு: க. சின்னத்துரை தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. திரு. சின்னத்துரை அவர்கள் தமது தலைமையுரையில் வாலிபர்கள்தான் இந்நாட்டின் வருங்கால நல் வித்தென்றும் அவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய தொண்டைச் செய்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

காப்பாளர்: திரு. சி. சங்கரப்பிள்ளை, தலைவர்; திரு. க. பரமநாதன், உப தலைவர்; திரு. செ. சிவசம்பு, செயலாளர்; திரு. வ. இரத்தினதுரை, துணைச் செயலாளர்: திரு. க. நாகேந்திரராஜா, பொருளாளர்; திரு. செ. சண்முகதாசன், துணைப் பொருளாளர்: திரு. சி. சுந்தரமூர்த்தி.

செயற்குழு உறுப்பினர்கள்: க. தருமலிங்கம், த. இரத்தினம், செ. சிவஞானம், ப. கணேசலிங்கம், செ. தங்கராசா, க. பாலசுப்பிரமணியம், ச. மகாதேவன், க. நாகராஜா.

3-வது வெற்றி வாரம்!

செல்லமகால் (கொழும்பு)
இம்பீரியல் (மட்டுநகர்)
நெல்சன் (திருமலை)
றீகல் (கண்டி)
பேர்ள் (சிலாபம்)
வெகுவிரைவில் றீகல் (நாரஹேன்பிட்டி)

முத்துராமன், விஜயா மற்றும் பலர் நடித்த




# நாணல்

# அக்டோபர் 4-ம் திகதி முதல்

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்சி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)
வேல்ஸ் (கண்டி) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை)
றீகல் (நீர்கொழும்பு) குமரன் (மன்னார்)

சேக்ஸ்பியரின் 'ஹம்லெட்டை'த் தழுவி, இலங்கையில், இலங்கை கலைஞர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒப்பற்ற திரையோவியம்.

கலாபவன பிலிம்ஸ் அளிக்கும்



# கடமையின் எல்லை

---

# குதூகலத்துடன் இப்பொழுது காட்சிதருகிறன்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)
மொடேன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்) திவொலி (நாரஹேன்பிட்டி) கல்யாணி (நாவலப்பிட்டி)

○ பகட்டு பெரிதல்ல, பண்புதான் பெரிது என்பதை வலியுறுத்தும் அதி உன்னத குடும்பச் சித்திரம்
○ ஒவ்வொரு பெண்ணும் அவசியம் பார்க்கவேண்டிய திரையோவியம்.

● மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., ● கவர்ச்சி கன்னி கே. ஆர். விஜயா
* சௌகார் ஜானகி, * நாகேஷ் * டி. எஸ். பாலையா
* கீதாஞ்சலி, * எஸ். ஏ. அசோகன் நடித்த

ஆர். ஆர். பிக்சர்ஸ்

# பணம் படைத்தவன்

பாடல்: வாலி இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி வசனம்: சக்தி கிருஷ்ணசாமி டைரக்ஷன்: ராமண்ணா

---



# 3-வது மகத்தான மாதம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்)
மீபுர (நீர்கொழும்பு) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) சமுத்ரா (அம்பலங்கொடை) சென்ட்ரல் (பருத்தித்துறை)
ஈஸ்வரன் (கிளிநொச்சி) சம்பா (இன்றுமட்டும்) (தெகியோவிட்ட)

சித்ரா புரொடக்ஷன்ஸாரின்

# சித்தி

திரைக்கதை வசனம் — டைரெக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

* பத்மினி * ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா, முத்துராமன், விஜயநிர்மலா, விஜயஸ்ரீ, நாகேஸ் மற்றும் பலர் நடித்தது

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எஸ். எம். விஸ்வநாதன்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஆ, இலக்கத்தில்
1966-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 28-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.